# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු






வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 06.04.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 127 | பக்கங்கள் : 16





06
முழுமையாக நேற்று முடங்கியது மன்னார்





07
கறுப்புப் பட்டியலில் உள்ளோர் சிறைகளில் அடைக்கப்படுவர்





09
ஆயுதப் புரட்சியுடன் ஆரம்பமான ஓர் அரசியல் கட்சியின் வரலாறு





12
53 கோடி பேஸ்புக் பயனர்களின் தகவல் இணையத்தில்


# தனித் தமிழீழம் அமைவதற்கு வழிகோலுகிறார்கள் தேரர்கள்!



## மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்ரல் 06

தனித்தமிழீழத்தை இலங்கைத் தீவில் அமைப்பதற்கும், சர்வதேச சமூகம் அதற்கு உதவும் வகையில் சில தேரர்களின் செயற்பாடு அமைந்துள்ளதாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகப்புத்தகத்தில் அவர் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.

15



## மாநகரசபை உறுப்பினர் உட்பட யாழில் 15 பேருக்கு கொரோனா!

கொழும்பு,ஏப்.06

யாழ்ப்பாணத்தில் மேலும் 15 பேருக்கும், வவுனியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்றுத் திங்கட்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களில் 8 பேர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைகழக மருத்துவபீட ஆய்வுகூடம் என இரண்டிலும் 761 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே 16 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்கு தொற்றுள்ளமை

15

## ஆயர் இராயப்பு ஜோசப்பின் திருவுடல் நேற்று நல்லடக்கம்

### பல்லாயிரக்கணக்கானோர் இறுதி அஞ்சலி நிகழ்வில் பங்கேற்பு

மன்னார், ஏப். 08

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூத உடல் நேற்ன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூத உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் பூரண கடையடைப்பு

15

## முள்ளிவாய்க்காலைக் கடந்திருந்தால் சுமந்திரனுக்கு வலிகள் புரிந்திருக்கும்

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 06

இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலை கடந்து வந்திருந்தால் சுமந்திரனுக்கு வலிகள் புரிந்திருக்கும் என வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது, வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத் தலைவி கனகரஞ்சினி இதனைக் குறிப்பிட்டார்.

இனப் படுகொலைக்கான சாட்சியங்கள் போதாது என சர்வதேச நிபுணர்களின் கருத்தைச் சுட்டிக்காட்டி பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அண்மையில் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்தமை

15



## சிவஞானசோதி காலமானார்

கொழும்பு, ஏப்ரல் 06

மனித உரிமைகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளரும், பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், புனர்வாழ்வு அமைச்சின் முன்னாள் செலளாளருமான வேலாயுதன் சிவஞானசோதி நேற்றிரவு கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார். மரணமடையும் போது அவருக்கு வயது 61.

சுகவீனமுற்றநிலையில் நேற்றுக்காலை

15

## கொரோனா தொற்றால் மேலும் ஐவர் உயிரிழப்பு



கொழும்பு,ஏப்.06

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று மேலும் ஐவர் உயிரிழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 586 ஆக அதிகரித்துள்ளது. (எ)

## பேராயரின் கருத்தால் கவலையில் மைத்திரி

கொழும்பு,ஏப்.06

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தன்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை வெட்கப்படவேண்டிய விடயமாகும் என்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை

15

## மாகாணசபை தேர்தலுக்கு ஆறு மாதங்கள் தேவை!

### அமைச்சர் பீரிஸ் நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஏப்.06

"தேர்தல் முறை என்ன என்பதை முடிவுசெய்து சட்டத்தை வரைந்து நாடாளுமன்றத்தில் சமர்பித்து அதனை நிறைவேற்றிய பின்னரே மாகாண சபைத் தேர்தலை நாடளாவிய ரீதியில் நடத்த முடியும். இன்னும் ஆறு மாதங்களிற்குள் இதுதொடர்பிலான செயற்பாடுகளை பூரணப்படுத்த முடியும்."

இவ்வாறு கூறியிருக்கின்றார் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ். சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பத்தரமுல்லை நெலும்

15

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித் தமிழீழம்...

"கறுப்பு ஜூலை புகழ் கொண்ட ஒரு தேரர் உட்பட பௌத்த தேரர்களின் குழு மூன்று பிரேரணைகளை தேசிய அரங்கில் முன்வைத்துள்ளது.

1)நாட்டின் பெயரை 'சிங்களே' என மாற்றவேண்டும்.

2)அதிகார பரவலாக்கம் வேண்டவே வேண்டாம்.

3)சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி.

"அதாவது இந்த தேரர்கள் மறைமுகமாக, 'உங்களுக்கு இங்கு இடமில்லை. தனித்தமிழீழ நாட்டை இலங்கைத் தீவில் அமையுங்கள்' என தமிழர்களுக்கும், 'அதற்கு உதவுங்கள்' என சர்வதேச சமூகத்துக்கும் கூறுகிறார்கள் என நினைக்கிறேன்.

"ஆகவே, இந்த தேரர்கள்தான் இன்று இலங்கையின் பிரதான பிரிவினைவாதிகள். மீண்டும், மீண்டும், இலங்கைக்கு கறுப்பு 'பெயிண்ட்' அடிக்கிறார்கள்" என்று மனோ கணேசன் தனது பதிவில் கூறியுள்ளார்.

## சிவஞானசோதி..

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர், தீவிர மருத்துவ சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றிரவு 9.30 மணிய ளவில் காலமானார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவரது அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றி, வடக்கு கிழக்கு புனரமைப்பு, இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் போன்ற நடவடிக்கைகள் தீவிரமான அக்கறை காட்டியிருந்தார். இறுதிக் கிரியைகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஆயர்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு துக்க தினம் அனுஷ் டிக்கப்பட்டது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன் னார் ஆயர் இல்லத்தில் இருந்து மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்திற்கு ஊர்தி பவனியூடாக கொண்டு செல்லப்பட்டது.

பூதவுடல் நேற்று பிற்பகல் 3 மணி வரை அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கையில் உள்ள மறைமாவட்ட ஆயர்களின் இரங்கல் திருப்பலியுடன் பூதவுடல், மாலை 5.30 மணியளவில் ஆலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட மறைந்த மன்னார் மறைமாவட்ட ஒய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உருவச் சிலையை மாலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை திறந்து வைத்தார்.

## முள்ளிவாய்க்காலை...

தொடர்பாக ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏற்கனவே நாங்கள் உண்மைச் சாட்சியங்களை முன்வைத்திருக்கின்றோம். ஆதாரங்களுடன் நாங்கள் ஜெனிவா முற்றத்தில் ஆயிரம் கோவைகளைச் சாட்சியங்களுடன் கொண்டு போய் ஒப்புவித்திருக்கின்றோம். சாட்சியங்களாக அங்கு போய் பேசிக் கொண்டும் இருக்கின்றோம். இந்தளவு தெரிந்துகொண்டும் சரியான ஆதாரங்கள், போர்க்குற்ற ஆதாரங்கள் இல்லையென்று சொல்லப்படுகின்றது.

இந்த வேளையிலே சர்வதேசத்தில் இருக்கின்ற பிரதிநிதிகள், அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகள் எங்களுக்காக அங்கு குரல் கொடுக்கின்றார்கள். சர்வதேசத்தில் இருக்கின்ற எங்கள் உறவுகள் அங்கே குரல் கொடுக்கின்றார்கள். அவர்கள் மற்றவர்களைப்போல் தப்பினோம் பிழைத்தோம் என்று இருந்திருந்தால் இன்று நாங்கள் சர்வதேசத்தில் போய் பேசியிருக்க முடியாது-என்றார்.

## மாநகரசபை...

கண்டறியப்பட்டது.

பருத்தித்துறை வைத்தியசாலை நோயாளர் விடுதியில் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. இவர் நாவாந்துறையைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணம் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது. இவர்களில் நால்வர் பாற்பண்ணை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

மற்றொருவர் யாழ்ப்பாணம் மாநகரில் வங்கி ஒன்றில் பணியாற்றும் கொக்குவிலில் வசிப்பவர்.

இதேவேளை, வவுனியா பொது வைத்தியசாலை விடுதி ஒன்றில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 71 வயதுடைய முதியவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவருக்கு கொரோனா நோய்த்தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் வசித்து வந்தவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-எ)

## பேராயரின்...

தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை நாவல பிரதேசத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிர்வாக சேவையாளர் சங்கம் நாவல பிரதேசத்தில் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது.

கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பேராயரின் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போதே, பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை என்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிக்கின்றன. என்று அவர் குறிப்பிட்டார்.

இதன் போது மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்: மாகாண சபைத் தேர்தல் தொடர்பான சட்ட மூலமே இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரே அது குறித்து தீர்மானிக்க முடியும். அது தொடர்பில் இதுவரையில் எவ்வித கலந்துரையாடல்களையும் நாம் முன்னெடுக்கவில்லை-என்றார்.

பேராயரின் கருத்து தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவிக்கையில்:

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கும் தெரிவாகிவிட்டார்.

தேர்தல் நிறைவடைந்துவிட்டது. மீண்டும் அவர் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை. எனவே, இதனைத் தவறாக புரிந்து கொள்ளுகின்றனர் என்றே நான் எண்ணுகின்றேன்.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் அவர் குற்றவாளியாகக் குறிப்பிடப்படவில்லை.

அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு இடமளிக்குமாறு தான் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது- என்றார். (எ)

# இராயப்பு யோசப் ஆண்டகைக்கு சபையில் கூட்டமைப்பு அஞ்சலி

கொழும்பு, ஏப். 06

மறைந்த, மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அஞ்சலி செலுத்தினார்.

எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உலக நாடுகளுக்கு தமிழ் மக்களின் சாட்சியாக தன்னை பதிவு செய்தவர் எனவும் இதன்போது அவர் புகழாரம் சூட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்றுத் திங்கள் கிழமை, சிறப்பு அனுமதி பெற்று இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் அவர்களுக்கு தமிழ் மக்கள் சார்பாக எமது அஞ்சலியையும் இறை வணக்கத்தையும் தெரிவித்து நிற்கின்றேன்.

யுத்த காலங்களில் எமது தமிழ் மக்கள் எதிர்கொண்ட ஆபத்துக்களை எதிர்த்து நின்று தகர்த்து, எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உலக நாடுகளுக்கு தமிழ் மக்களின் சாட்சியாக தன்னை பதிவு செய்த ஓர் ஆண்டகையாவார்.

அவருடைய இழப்பு தமிழ் மக்களுக்கும், கத்தோலிக்க மக்களுக்கும் மிகப் பெரிய ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் - என்றார். (எ)

# மேலும் 355 பேர் பூரணசுகம்

கொழும்பு, ஏப்.06

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளா னவர்களுள் நேற்று மேலும் 355 பேர் பூரண குணம டைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 90 ஆயிரத்து 563 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர். (எ)

# 'பீல்ட் மார்ஷல்' பதவி வகிப்போருக்கு சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படாது

### சபையில் கூறினார் சமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 06

பீல்ட் மார்ஷல் பதவி வகிப்பவர்களுக்கு இராணுவத்தால் சம்பளமோ, ஓய்வூதியமோ வழங்கப்படுவதில்லை. ஆனால், வாழ்நாள் வரையில் பீல்ட் மார்ஷல் பதவி நீடிக்கும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஆளுங்கட்சி உறுப்பினர் அஜித் ராஜபக்ஷவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

பீல்ட் மார்ஷல் பதவியென்பது இராணுவத்தில் உள்ள உயர் பதவியாகும். இராணுவ சம்பிரதாயங்களுக்கு அமைவாக பீல்ட் மார்ஷல் பதவியும், அதற்கு இணையாக கடற்படையில் உள்ளவர்களுக்கும் அப்பதவி வழங்கப்படுகின்றது. அப்பதவியைப் பெறுபவர்கள் வாழ்நாள் வரையில் அந்தப் பதவியில் இருப்பார்கள்.

அத்துடன் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு அவரது பணியாள் தொகுதிக்காக 19 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர், அவருக்குப் படையினரின் உத்தியோகபூர்வ காரொன்றும் வழங்கப்பட்டுள்ளது. சரத் பொன்சேகாவுக்கு உத்தியோகபூர்வ இல்லம் எதுவும் வழங்கப்படவில்லை.

மேலும் அட்மிரல் கரன்னகொடவுக்குப் பணியாள் தொகுதிக்காக 9 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவருக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் எதுவும் வழங்கப்படவில்லை. பணியாள் தொகுதியினரின் பாவனைக்காக ஜீப் ரக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது.

விமானப் படையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற டபிள்யு.டி.ஆர்.ஜே. குணதிலக்கவுக்கு பணியாள் தொகுதிக்காக 17 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். உத்தியோகபூர்வ இல்லமோ, வாகனமோ வழங்கப்படவில்லை.

அத்துடன் பீல்ட் மார்ஷல் பதவி வகிப்போருக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியங்களோ வழங்கப்படுவதில்லை - என்றார். (எ)

## மாகாணசபை...

மாவத்தையில் உள்ள தலைமையகத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களில் முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றுதான் புதிய அரசியலமைப்பு உருவாக்கற் பணிகளாகும். 43 வருடங்களுக்கு முன்னதாக தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பே இன்றும் அமுலில் உள்ளது. 4 தசாப்த காலங்களில் இலங்கை சமூகம் பரந்தளவில் மாற்றமடைந்துள்ளது. அதனால் அரசியலமைப்பின் தொகுதிகளை அல்ல, ஒட்டுமொத்த யாப்பினையும் ஆழமாக ஆராய்ந்து பூரணமாக அரசியலமைப்பினை உருவாக்குவது தற்காலத்தேவை என்பதை அறிகின்றோம்.

அதனால்தான் முதற்கட்ட நடவடிக்கையாக ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையிலான 9 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. ஜூலை மாதத்திற்கு முன்னதாக நிபுணர் குழு தனது அறிக்கையை அரசாங்கத்திற்கு கையளிக்கும் என எதிர்பார்க்கின்றோம். அந்த வேலைத்திட்டத்தின் ஊடாக, தேர்தல் சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்தனர்.

புதிய தேர்தல் முறையன்றி தேர்தலை நடத்தமுடியாது. இந்த இடைவெளியை பூரணப்படுத்தாமல் தேர்தலை நடத்த முடியாது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளதால் புதிய முறை அவசியமாகின்றது. சம்பந்தப்பட்ட அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன், அமைச்சரவையில் பல மாற்றுவழிகளை சமர்பித்த நிலையில் கொள்கை ரீதியிலான தீர்மானம் ஒன்றை அமைச்சரவைக்கு முன்னதாக அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கூடி மேற்கொள்ளவேண்டும்.

எல்லை நிர்ணயக் குழு ஒன்றையும் அமைக்க வேண்டும். அதன் செயற்பாடுகளுக்காக 03, 02 மாதங்களாகும். தேர்தல் முறை என்ன என்பதை முடிவுசெய்து சட்டத்தை வரைந்து நாடாளுமன்றத்தில் சமர்பித்து நிறைவேற்றப்பட்ட பின்னரே மாகாண சபைத் தேர்தலை நாடளாவிய ரீதியில் நடத்தமுடியும். இன்னும் 06 மாதங்களிற்குள் இது தொடர்பிலான செயற்பாடுகளை பூரணப்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

தந்தை செல்வாவின் இறுதிக்காலம். இந்த ஊர்க்குருவி, ஊடகத்துறையில் கால்பதித்த காலம். ஒரு கூட்டத்தில் தந்தை செல்வா கூறினார். அவர் அப்படித்தான் கூறினாரா என்பது தெரிய வில்லை. ஏனெனில் அவரது கடைசி காலத்தில் அவர் கூறுவதை அமிர்தலிங்கம் மைக்கில் உரத்துக் கூறுவதைத்தான் நாம் கேட்டிருக்கின்றோம்.

தந்தை கூறுவதாக அமிர்தலிங்கம் கூறியது இதுதான்:

“தமிழ்மக்களுடைய பிரச்னைக்கு எனது காலத்தில் தீர்வு வந்துவிடும் என்று நான் கூறப்போவதில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கு பிரச்னை இருக்கிறது என்பதை எமது அடுத்த சந்ததியிடம் விட்டுச் செல்ல வேண்டும். அவர்கள் தமது தீர்வுக்காக போராடுவார்கள். அமிர்தலிங்கம் காலத்தில் பிரச்னைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் அவர் இந்தப் பிரச்னையை பிரச்னையாக அடுத்த சந்ததியிடம் விட்டுச் செல்ல வேண்டும். இல்லையேல் தமிழ் இனம் இந்த நாட்டில் இருந்தது என்பதற்கே அடையாளம் இல்லாமல் போய்விடும்...”

ஆக, பிரச்னைக்கு தீர்வு கிடைக்கின்றதோ இல்லையோ பிரச்னை பிரச்னையாக இருந்தால் தான் என்றோ ஒருநாள் தீர்வு வரும் என்பதைத்தான் அன்று தந்தை செல்வா அப்படிக் கூறியிருக்கவேண்டும்.

இலங்கையில் நடந்து முடிந்தது இனப்படுகொலை அல்ல என்று கூறிவந்த சுமந்திரன், அண்மைக்காலமாகவே அதனை ஏற்றுக்கொண்டவர் போல நடந்து கொண்டார்.

கடைசியாக ஜெனிவாவுக்கு அனுப்பிய கோரிக்கை கடிதத்திலும் அதனை வலியுறுத்தியதுடன், அந்த கோரிக்கையை கூட்டமைப்பு, முன்னணி, கூட்டணி என்று மூன்று கட்சிகளும் கையெழுத்திட்டு அனுப்பியிருந்தன.

அந்தக் கோரிக்கையில், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாக இருந்தது.

ஆனால் தீர்மானத்தில் அது சேர்க்கப்படாதபோது, மனித உரிமை பேரவையினால் சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இலங்கையை நிறுத்தும் அதிகாரம் மனித உரிமைப் பேரவைக்கு இல்லை என்று சுமந்திரன் வாதிட்டு வருகிறார். சுமந்திரன் மட்டுமன்றி அரச தரப்பிலிருந்தும் அதேகருத்தை கூறிவருகின்றனர்.

சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இந்தப் பிரச்னையைக் கொண்டு போவதற்கு மனித உரிமைப் பேரவைக்கு அதிகாரம் இல்லை என்பது சுமந்திரனுக்குத் தெரிந்ததுபோல, அதன் ஆணையாளருக்கும் தெரிந்தே இருக்கும். ஆனால் அவர் தனது அறிக்கையில் சர்வதேச நீதிமன்றின்முன் கொண்டுபோகவேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது ஏன்?

அவரைப் பொறுத்தவரை பாதுகாப்புச் சபை நிராகரித்தாலும், அந்தப் பிரச்னை அங்குவரையாவது போகவேண்டும் என்று அவர் விரும்புகின்றார் என்றே அர்த்தப்படவேண்டும்.

அங்கே சீனாவோ அல்லது ரஷ்யாவோ தமது வீட்டோவை பயன்படுத்தினாலும், அதற்கு அடுத்து என்ன என்ற கேள்வி எழவேண்டாமா?

நேற்றை இந்தப் பந்தியில் சுமந்திரன் ஒரு திறமையான சட்டவாதி என்பதை குறிப்பிட்டிருந்தோம். வெல்ல முடியாத எந்த வழக்கையும் ஒரு திறமையான சட்டவாதி எடுத்து வாதிடப்போவதில்லைத்தான்.

நடந்தது இனப்படுகொலை என்றாலும் கூட அதனை நீதிமன்ற பொறிமுறை ஒன்றின் ஊடாகவே நாம் நிரூபிக்க வேண்டும். நம்மிடையே உள்ள திறமையான சட்டவாதியே அந்த வழக்கில் அஜராக தயாராக இல்லாதபோது?

ஆனால் அதுவே அவரது கருத்து என்றால், அந்தக் கருத்தில் சுமந்திரன் உறுதியாக இருக்கவேண்டும்.

அதனை ஏற்றுக்கொள்கின்ற வகையில் எந்தக் கட்டத்திலும் நடந்துகொள்ளக்கூடாது. அடுத்த தேர்தல்வரை மட்டும் இதில் உறுதியாக இருக்கக் கூடாது என்பதையே வலியுறுத்த வேண்டியுள்ளது.

நடந்தது இனப்படுகொலைதான் என்று வாதிடுபவர்கள் தந்தை செல்வாவின் கூற்றை நினைவில் வைத்திருக்கவேண்டும்.!

‘முன்னைய 30 ஒன்று, 34 ஒன்று, 40 ஒன்று தீர்மானங்களில் கலப்பு நீதிமன்ற முறை சொல்லப்பட்டிருந்தது. இந்தத் தடவை அது சொல்லப்படவில்லை.

ஒரு முழுமையான நீதிமன்றப் பொறிமுறையின் கீழ் பொறுப்புக்கூறல் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது’

- இதுவும் சுமந்திரன் சொன்னதுதான்.

அவர் ஆதரிக்கும் ஜெனிவா தீர்மானத்திலும் நீதிமன்ற பொறிமுறை குறித்து செல்லப்பட்டிருக்கின்றது. அந்த நீதிமன்ற பொறிமுறையிலாவது தமிழர் தரப்பு வெற்றிபெற போதிய ஆதாரங்களை அவர் திரட்டும் பணியையாவது செய்யவேண்டும்!

**- ஊர்க்குருவி.**

# ஈஸ்டர் தாக்குதல் குறித்த அமைச்சரவை உப குழு அறிக்கை ஜனாதிபதியிடம்!



**கொழும்பு, ஏப்ரல் 06**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து, அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கான அமைச்சரவை உபகுழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.**

குழுவின் தலைவர் அமைச்சர் சமல் ராஜபக்ஷ, நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் அறிக்கையை கையளித்தார்.

2021 பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி ஜனாதிபதி அவர்களினால் இக்குழு நியமிக்கப்பட்டது.

குழுவின் அறிக்கை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படவிருந்தபோதிலும் மேலதிக ஆய்வுகளுக்காக குழு மேலும் இரண்டு வாரகாலம் அவகாசம் பெற்றுக்கொண்டிருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கையை விரிவாக ஆராய்ந்த குழு, 78 பரிந்துரைகளை கண்டறிந்துள்ளது. அப்பரிந்துரைகளை எந்த நிறுவனத்தினால் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதும் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியான பரிந்துரைகள் ஜனாதிபதியினால் இதற்கு முன்னர் சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

குழுவின் ஏனைய உறுப்பினர்களான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, ரமேஷ் பத்திரன, பிரசன்ன ரண துங்க, ரோஹித அபேகுணவர்தன மற்றும் குழுவின் செயலாளர் ஜனாதிபதி அலுவலக பணிப்பா ளர் நாயகம் (சட்டம்) ஹரிகுப்த ரோஹனதீர ஆகியோரும் அறிக்கையை சமர்ப்பிக்கும் இவ்வேளையில் பிரசன்னமாகியிருந்தனர்.

# சகல முஸ்லிம் நிறுவனங்களினதும் தகவல்களைப் புதுப்பிக்க தீர்மானம்



## வெளிநாடுகளிலிருந்து பணம் வருவதால் இந்நடவடிக்கை என்று விதுர விளக்கம்

கொழும்பு, ஏப்.06

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன் னார்வ நலனோம்புகை நிறுவனங்களின் தகவல்களைப் புதுப்பிக்க நடடிக்கை எடுத்துவருகின்றோம். இதற்காக இவ்வாறான நிறுவனங்களை கம்பனிகள் சட்டம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களின் கீழ் பதியுமாறு அறிவித்திருக்கின்றோம் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள தன்னார்வ நலனோம்புகை நிறுவனங்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டி ருப்பது தொடர்பில் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பல தன்னார்வ நலனோம்புகை நிறுவனங்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருவது தொடர்பில் பாதுகாப்புப் பிரிவினால் திணைக்களத்திடம் விசாரித்தபோது, அதுதொடர்பான தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாமல் இருப்பது கேள்விக்குறியான விடயமாகும்.

இந்த நிறுவனங்களின் கணக்கு விவரங்கள் திணைக்களத்துக்கு வழங்கப்படாமல் இருப்பது தொடர்பில் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் திணைக்களத்துக்கு எந்த வித சட்ட ஏற்பாடுகளும் இல்லை. அதனால், இது தொடர்பில் புதிய சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதனால் இவ்வாறான நன்கொடை நிறுவனங்களாக பதிவு செய்யப்பட்டிருக்கும் அனைத்து நிறுவனங்களையும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாகப் பதிவு செய்யுமாறு வக்பு சபை கடந்த 2019 ஆண்டு எழுத்து மூலம் அந்த நிறுவனங்களுக்கு அறிவித்திருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்களும் அனுப்பப்பட்டி ரூருந்தன. இதன் போது சில தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதில்லை என்பது தெரியவந்தது. அதன் பிரகாரம் அந்த நிறுவனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டிருக்கின்றது.

அத்துடன் வக்பு சபை சட்டத்துக்கமைய பதிவு செய்யப்பட்டிருந்த ஏனைய நிறுவனங்க ளுக்கு ஒரு வருடகாலம் வழங்கப்பட்டிருந்தன. இதன் பிரகாரம் 2020 ஒகஸ்ட் மாதத்துக்கு பின்னர் வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த பதிவு இலக்கத்தை பயன்படுத்தக்கூடாது என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால், சில நிறுவனங்கள் வக்பு சபை சட்டத்தின் கீழ் பதிவு செய் யப்பட்டிருப்பதுடன் ஏனைய நிறுவனங்கள் கம்பனி கள் சட்டம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதை அறியக் கிடைக்கின்றது- என்றார். (எ)




**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eelanadu
06.04.2021 செவ்வாய்க்கிழமை
சார்வரி, பங்குனி 23

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசாங்கத்திற்குள் போராட்டமா?

அரசாங்கத்திற்குள் என்ன நடக்கின்றது? - என்பது தொடர்பில் அவ்வப்போது பல வகையான செய்திகள் வெளியாகின்றன. அமைச்சரும், அரசாங்கத்திற்குள் வலுவான குரலாகவும் இருந்த விமல் வீசவன்ச மூலம் அண்மையில் ஒரு சலசலப்பு ஏற்பட்டு ஓய்ந்தது. கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் வீரவன்ச தெரிவித்திருந்த கருத்துக்கள் பொதுஜன பெரமுனவிற்குள் எதிர்ப்புக்களை ஏற்படுத்தியிருந்தது. அதன் பின்னர் விமல் வீரவன்ச தற்போது அமைதியாக இருக்கின்றார். அதேபோன்று, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பசில் ராஜபக்சவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் ஒருசில செய்திகள் வெளியாகியிருந்தன. தேர்தலுக்கு பல வருடங்கள் இருக்கின்ற நிலையில் இவ்வாறானதொரு செய்தி ஏன் வெளியாகியது? இது தொடர்பிலும் சலசலப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், அரசாங்கத்திற்குள் இருக்கும் பிறிதொரு வலுவான குரலாக அதாவது, சிங்கள தேசியவாதத்தின் உறுதியான குரலாக நோக்கப்படும் உதய கம்பன்பில, தாம் அரசாங்கத்திற்குள் ஒரு போராட்டத்தை மேற்கொண்டுவருவது உண்மைதான். ஆனால், அது அரசாங்கத்திற்கு எதிரானதல்ல. மாறாக, அரசாங்கத்தை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான போராட்டம் என்றவாறு தெரிவித்திருக்கின்றார். எங்களுக்கு வாக்களித்த 69 லட்சம் மக்களின் ஆணையை அரசாங்கம் மதித்து நடந்திருந்தால் 20ஆவது திருத்தச்சட்டம் இவ்வாறானதொரு வழியில் வந்திருக்காது, கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவிற்கு வழங்குவது தொடர்பான எண்ணங்கள் அரசாங்கத்தின் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்காது. -. இவ்வாறு தெரிவித்திருக்கும் உதய கம்பன்பில, 69 லட்சம் மக்கள் எங்கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுவதற்கான போராட்டத்தையே நாம் ஆரம்பத்திருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

உண்மையில், கம்பன்பிலவின் கூற்று தெளிவற்ற ஒன்றாகவே இருக்கின்றது. அதாவது, 69 லட்சம் சிங்கள மக்களின் ஆதரவை பெற்று ஆட்சியை கைப்பற்றியிருப்பதால், சிங்கள மக்களின் விருப்பங்களை மட்டுமே அரசாங்கம் கருத்தில்கொள்ள வேண்டும். அவர்களுக்காகவே அரசாங்கம் இயங்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் இது ஒரு சரியான அரசாங்கமாக இருக்கமுடியாது. இதனை உறுதி செய்ய அரசாங்கம் தவறுகின்றது. எனவேதான் ஓர் உள் போராட்டம் தேவைப்படுகின்றது. இதுதான் விடயமென்றால் அரசாங்கம் ஏனைய சமூகங்கள் தொடர்பில் எவ்வித கரிசைனயும் காண்பிக்கக்கூடாது. அவ்வாறு காண்பிக்க முற்பட்டால், அது தவறானது. 20ஆவது திருத்தச்சட்டத்திறகு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு பெறப்பட்டதையும் கம்பன்பிலவால் சகித்துக்கொள்ள முடியவில்லை. உண்மையில், அரசாங்கத்திற்குள் இடம்பெறும் போராட்டமானது, ஒரு தூய சிங்கள ஆட்சிக்கான போராட்டமா?

இதில் வெற்றிபெறப் போவது யார்? தூய சிங்கள ஆட்சியென்றால், அது ஏனைய இனச் சமூகங்களுக்கும், இந்தியாவிற்கும், மேற்குலகத்திற்கும் எதிரான அரசாங்கமா? இவ்வாறானதோர் அரசாங்கத்தை முனகொண்டு செல்ல முடியுமா? ஏற்கனவே உலகத்திலிருந்து அதிகம் விலகிச் செல்லும் போக்கிலேயே இந்த அரசாங்கம் இருக்கின்றது. இதன் காரணமாகவே இலங்கையின்மீது மீண்டுமொரு பிரேரணை வந்திருக்கின்றது. பிரேரணைகளால் இலங்கையை கட்டுப்படுத்த முடியாவிட்டாலும் கூட, அந்தப் பிரேரணையையும் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டும் மேற்குலக நாடுகளின் கூட்டாகவும் தனியாகவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். அவர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுக்க முற்பட்டால் இலங்கையால் அதனை எதிர்கொள்ள முடியாது. இலங்கை மேலும் சிக்கல்களை எதிர்கொள்ளும். சீனாவிடம் அடைக்கலம் அடைந்தாலும், அதுவும் இலங்கையை வேறொரு பொறிக்குள்தான் தள்ளும். என்ன செய்யப் போகின்றது இந்த அரசாங்கம்? அரசாங்கத்திற்குள் போராட்டத்தை ஆரம்பித்திருப்பவர்கள் வெற்றிபெற்றால் என்ன நடக்கும்?

# நாட்டின் தலைவிதியை வெளிநாட்டு சக்திகளே தீர்மானிக்கின்றன!



- அலசுவது **இராஜதந்திரி** -

*இலங்கையின் கல்வி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், கண்டியில் ஊடகவியலாளர் மத்தியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பேசும்போது இலங்கையின் எதிர்காலத்தை வெளிநாட்டுச்சக்திகள் தீர்மானிக்க அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்.*

*இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இன்றுவரை இலங்கையின் தலைவிதியை வெளிநாட்டுச சக்திகளே பெரிதும் தீர்மானித்து வருகின்ற நிலையில், கல்வி அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டுச்சக்திகள் இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியாது எனக் கூறியிருப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.*

*இலங்கை சுதந்திரத்தை பெற்ற பின்னரும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக ஒரு நாகரிகமான வாழ்க்கை முறையைக் கொண்டிருப்பதற்கு வழியமைத்ததே பிரிட்டன் என்பது குறிப்பித்தக்கது. ஏறத்தாள 130 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதி வரை இலங்கை பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்டதாகவே விளங்கியிருந்தது. எனவே, 1948ஆம் ஆண்டு இலங்கை பெயரளவில் மட்டுமே பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றதே தவிர, இன்றுவரை எவ்விதத்திலும் ஒரு முன்னேற்றகரமான போக்கை அரசியல் ரீதியாகவோ அல்லது பொருளாதார ரீதியாகவோ இலங்கை அடைந்திராத நிலையே காணப்படுகின்றது.*

**இனரீதியான முறுகல்கள்**

*இலங்கையின் ஈடேற்றத்துக்கு பெரும் தடைக்கல்லாக இருப்பது இன ரீதியான முறுகல்களேயாகும். இலங்கையில் மூன்று தசாப்த காலமாக யுத்தம் இடம் பெற்றபோது வெளிநாட்டு சக்திகள் இலங்கைமீது அனுதாபம் கொண்டிருந்தனவே தவிர, எவ்வகையிலும் இலங்கையை பிளவுபடுத்த வேண்டுமென அவை நினைத்திருக்கவில்லை.*

*அத்துடன், இலங்கையின் பொருளாதாரம் யுத்த காலங்களில் சிதைவடைந்திருந்திருந்த போதெல்லாம் அதனை சீர்செய்ய வெளிநாட்டு உதவிகளே பெரிதும் உதவியிருந்தன. ஏற்கனவே பலதரப்பட்ட வெளிநாட்டு சக்திகளுக்கும் சோரம் போன நிலையில், வெளிநாட்டு சக்திகள் இலங்கைமீது ஆதிக்கம் செலுத்த முடியாது என்று கல்வி அமைச்சர் ஜி. எல் பீரிஸ் கூறியிருப்பது வேடிக்கையான கருத்தாகவே இருக்கின்றது.*

**சீனாவின் எழுச்சி**

*இலங்கையைப் பொறுத்தவரை சீனாவின் எழுச்சி ஓர் உந்து சக்தியாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. சீனா தெற்காசிய பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட இலங்கையை ஒரு முக்கிய பகடைக்காயாக வைத்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் வெளிநாட்டு சக்திகள் இலங்கையில் ஆதிக்கம் செலுத்த முடியாது என பீரிஸ் கூறியிருப்பது அர்த்தமற்றதொன்றாகவே இருக்கின்றது. இலங்கையை பொறுத்தவரை சீனாவின் ஒரு மாகாணம்போன்ற நிலையே தற்போது சீனாவினால் அமைக்கப்பட்டு வருகின்ற கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்டம் மூலமாக உருவாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.*

*இத்தடவை ஜெனிவா மனித உரிமைப் பேரவை கூட்டத்தொடரில் இலங்கைமீது கொண்டுவரப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டமை இலங்கை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சர்வதேச சமூகம் இலங்கைமீது அழுத்தங்களை பிரயோகிப்பதை தவிர்க்க முடியாது என்ற செய்தியை விடுப்பதாகவே இருக்கின்றது.*

*இன்றைய உலக நடை முறைகளை எடுத்து நோக்கும்போது ஒவ்வொரு நாடும் ஒன்றையொன்று சார்ந்திருக்க வேண்டிய நிலையே காணப்படுகின்றது. இலங்கையில் யுத்தம் நடைபெற்றபோது யுத்த தளபாடங்களை வழங்கி உதவுவதிலும் பல நாடுகள் முன்வந்திருந்ததையும் பேராசிரியர் பீரிஸ் கவனத்தில் கொள்ளவேண்டியவராகின்றார்.*

*இலங்கைக்கு சர்வதேச சமூகத்தின் உதவி கிடைத்திராத பட்சத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தில்கூட இலங்கையினால் வெற்றிபெற்றிருக்க முடியாது.*

*இலங்கை இத்தடவை ஜெனிவா பிரேரணையை நிராகரித்துள்ளது. இதன்மூலம், சர்வதேச சமூகத்துக்கு இலங்கை, தான் விட்ட தவறுகளை மூடிமறைக்க எத்தனிக்கின்றது என்ற செய்தியையே வழங்கியுள்ளது. இந்நிலையில், பேராசிரியர் பீரிஸ், இலங்கை சர்வதேச சமூகத்தை பகைத்துக்கொள்வதன் மூலம் சர்வதேச அரங்குகளில் ஒரு கௌரவமான நிலையை பேணமுடியாது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டியவராகின்றார்.* ●

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
காலநேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரக் கூடும். முடிவுகள் எடுப்பதில் தயக்கம், தடுமாற்றம் வந்து நீங்கும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம்.

**இடபம்**
பணத்தட்டுப்பாடு நீங்கும். இயல்பான கோபம் வரும். நண்பர்களுக்கு இடையே இருந்த மனக்கசப்பை நீக்குவீர்கள். பேச்சினால் தொல்லை ஏற்படாதபடி கவனமாக இருங்கள்.

**மிதுனம்**
பிறருடைய நீண்ட நாள் பிரச்னைக்கு தீர்வு கொடுப்பீர்கள். உங்களின் நேர்மையான உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். எதிர்ப்புகளைச் சமாளித்து நிம்மதி காண்பீர்கள்.

**கடகம்**
மனஅமைதி கூடும். பிள்ளைகளால் சிறு விரயம் உண்டு. உடன் இருப்பவர்களால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். மன அழுத்தம் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**
உங்களை குறை கூறியவர்களுக்கு பதிலடி கொடுப்பீர்கள். தேங்கிக் கிடந்த வேலைகள் மடமட வென்று முடியும். உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.

**கன்னி**
பதவி உயர்வு, சம்பள உயர்வுக்கான முயற்சி செய்வீர்கள். வெளிநாடு தொடர்பான விஷயங்களில் ஈடுபாடு ஏற்படும். உறவினரின் ஆதரவு அதிகரிக்கும். மனநிம்மதி கூடும்.

**துலாம்**
உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புதிய வாய்ப்புகள் அதிகரிக்கும். நன்மைகள் கூடுதலாகும். காத்திருந்த ஒரு திருமணம் சிறப்பாக முடியும்.

**விருட்சிகம்**
தடைகள், தாமதங்கள் இருப்பது பற்றிச் சலிப் படையாதீர்கள். பண விவகாரங்களில் சிறிதளவு மனஅழுத்தம் வந்து நீங்கும். புதிய திட்டங்கள் துவங்குவீர்கள். மன நிறைவு அதிகரிக்கும்.

**தனுசு**
உங்கள் மேல் இருந்த குற்றச்சாட்டு தீர்வதற்கான நிகழ்வு நடக்கும். பொறுப்பு காரணமாக பணியில் சீரான வளர்ச்சியைக் காணலாம். பணிச்சுமை குறைவதற்கான யுக்திகளை காண்பீர்கள்.

**மகரம்**
உறவினரிடையே உங்கள் கை ஓங்கும்படி உயர்வு வரும். ஆடம்பரச் செலவைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். சேமிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பீர்கள்.

**கும்பம்**
எதிர்பாலின நட்பால் ஆதாயம் உண்டு. கவனமாக இருங்கள். சிறு உபாதை பற்றிக் கவலை வேண்டாம். மன உற்சாகம் உண்டு. உங்களின் உயர்வு காரணமாக உறவினரிடையே புகழ் கூடும்.

**மீனம்**
பிள்ளைகளால் ஏற்பட்ட மனஅழுத்தம் அவர்களாலேயே தீரும். சிறு பயணம் மகிழ்ச்சி தரும். சிறிய நற்செய்தி உண்டு. வேற்று இன மனிதர்களுக்கு உதவுவதால் நெகிழ்வீர்கள்.

# 428 கோடி ரூபா பணம் பொருட்கள் சிக்கின!

சென்னை, ஏப். 06

தமிழக சட்டப்பேரவை தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் இதுவரையான காலப் பகுதியில் 428 கோடி ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யப்பிரதா சாகு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தல் விதிமீறல்கள் தொடர்பில் முறைப்பாடு அளிக்க 1950 என்ற இலக்கத்தை பயன்படுத்தி மாவட்ட அளவிலான தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் பொதுமக்கள் வாக்குச்சாவடிக்கு செல்லும் போது தொலைபேசிகளை கொண்டு செல்லக்கூடாது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வாக்குச்சாவடிகளில் வெப் கெமரா பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வாக்குப்பதிவை கண்காணிக்க தனி கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# தமிழகத் தேர்தல் இன்று!

## அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

சென்னை, ஏப். 06




தமிழகத்தில் 234 தொகுதிகளுக்குமான சட்டப்பேரவை தேர்தல் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறுவுள்ளது.

ஒரே கட்டமாக நடைபெறவுள்ள இந்த தேர்தல் காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு நிறைவடையவுள்ளது.

இதற்காக மாநிலம் முழுவதும் 37 ஆயிரம் இடங்களில் 88 ஆயிரத்து 937 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 10 ஆயிரத்து 727 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளன.

அதேநேரம் பாதுகாப்பு பணிகளுக்காக 1.58 இலட்சம் பொலிஸார் மற்றும் துணை இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இறுதி பிரசாரங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், தொகுதிகளுக்கு தொடர்பில்லாத அனைவரும் உடனடியாக வெளியேற வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அத்துடன் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பறக்கும் படைகள், நிலை கண்காணிப்புக் குழுக்களின் வாயிலாகவும் தீவிர சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் சுமார் 702 பறக்கும் படைகள், நிலை கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.



# புதுச்சேரியிலும்வாக்குப்பதிவு

புதுச்சேரி சடட்ப்பேரவைக்கும் இன்று ஒரேகட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது. இதனையொட்டி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பும் பணி நேற்று காலை தொடங்கியது. பலத்த பாதுகாப்புடன் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

புதுச்சேரியில் 30 தொகுதிகளில் உழவர்கரை, நெல்லித்தோப்பு ஆகிய இரு தொகுதிகளில் 16 வேட்பாளர்கள் போட்டியிடுவதால் இரண்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

கொரோனாவையொட்டி ஒரு வாக்குச்சாவடிக்கு ஆயிரம் வாக்குகள் மட்டும் இடம் பெறும். இத்தேர்தலில் 1558 வாக்குச்சாவடிகள் 635 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனாம், மாஹே நீங்கலாக 28 தொகுதிகளில் மகளிர் கொண்டே செயல்படும் ஒருவாக்குச்சாவடி தொகுதி தோறும் அமைக்கப்பட்டுள்ளது.

# திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் மீது வழக்கு

சென்னை, ஏப். 06

காட்பாடி தொகுதியில் வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்யப்பட்ட வழக்கில், திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் மீது திருவலம் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள காட்பாடி சட்டப் பேரவை தொகுதியில் திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் போட்டியிடும் நிலையில், அவரை எதிர்த்து அதிமுக வேட்பாளர் ராமு போட்டி யிடுகிறார். ஏற்கெனவே அதிமுகவினர் தங்கியிருந்த உணவகத்தில் நடத்தப்பட்ட சோதனையில் வாக்காளர்களுக்கு தலா ரூ.500 வீதம் பணம் விநியோகிக்கப்பட்ட குறிப்பேடுகளுடன் ரூபா 18 லட்சத்து 41 ஆயிரம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக, அதிமுக வேட்பாளர் ராமு உள்ளிட்ட 9 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில், வேட்பாளர் ராமுவைத் தவிர்த்து மற்ற 8 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கில் இரண்டாவது குற்றவாளியாக திமுக பொதுச் செயலாளர் துரைமுருகன் நேற்று மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச உத்தியோகத்தர்கள் வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஏப். 06

வவுனியா செட்டிகுளத்தில் சமுர்த்தி உத்தியோகத்தரொருவரை பொதுமகன் ஒருவர் தாக்கியதால் அரச உத்தியோகத்தர்களாகிய தாம் கடமைக்குச் செல்வதற்கு பாதுகாப்பு தேவை எனவும், தாக்கிய நபருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியும் செட்டிகுளம் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் கிராம சேவகர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது வன்முறையாளர்களால் அரச ஊழிர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும், அரச உத்தியோகத்தர்கள் மீதான தொடர் தாக்குதலுக்கு கடும் சட்டத்தை அமுல்படுத்து போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேர போராட்டத்தின் பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளர் திருமதி கு. சுலோஜனாவிடம் மகஜரொன்றினையும் கையளித்தனர்.

# கொரோனாவால் வெளிநாடுகளில் 122 இலங்கையர்கள் உயிரிழப்பு!

## 30832 பேர் வேலையிழப்பு

கொழும்பு, ஏப். 06

**கோவிட்19 தொற்றுக்குள்ளாகி 122 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளதாக தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

அத்துடன், 56,403 புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் கோவிட்19 தொற்று நோய் காலப்பகுதியில் இலங்கைக்கு திரும்பியுள்ளனர். அவர்களில் 30,832 பேர் வேலையிழந்து நாடு திரும்பியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

மார்ச் 31ஆம் திகதி வரையான தரவுகளின் பிரகாரம் சவுதி அரேபியாவில் பணிபுரிந்த 36 இலங்கையர்கள், குவைத்தில் 36 பேர், ஐக்கிய அரபு எமிரேட்ஸில் 24 பேர் கோவிட்19 தொற்று நோயால் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கட்டாரில் - 09, ஓமானில் -07, லெபனானில் -04, ஜோர்டானில் - 03, பஹ்ரைனில் - 02, இஸ்ரேலில் ஒருவர் கோவிட் -19 காரணமாக இறந்துள்ளனர் என அமைச்சர் கூறினார்.

மேலும் 4,431 புலம்பெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்கள் கோவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக கட்டாரில் 1,792 இலங்கையர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. வெளிநாடுகளில் தொற்றுக்குள்ளான மொத்தம் 4,071 பேர் குணமடைந்துள்ளனர் எனவும் தொழில்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

# அஸ்ட்ராசெனகா 2ஆம் டோஸ் செலுத்தும் நடவடிக்கை 19 ஆம் திகதியன்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 06

அஸ்ட்ராசெனகா கொரோனா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்துவதில் எந்தப் பிரச்சினையும் இல்லையென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதன்படி, இரண்டாவது டோஸின் தடுப்பூசித் திட்டம் ஏப்ரல் 19ஆம் திகதி முதல் தொடங்கும் எனவும் மூன்று இலட்சம் டோஸ் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி இரண்டாவது டோஸுக்குப் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சயந்த கருணாதிலக நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், இரண்டாவது டோஸ் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, ஏப்ரல் 19 முதல் ஜூன் 30 வரை நடைபெறும் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இந்தியாவில் இருந்து முன்பதிவு செய்யப்பட்டுள்ள அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளும் கொவாக்ஸ் திட்டத்திலான மீதமுள்ள தடுப்பூசிகளும் இந்த கால கட்டத்தில் பெறப்பட்டுவிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளின் இரண்டாவது டோஸை வழங்குவதில் எந்தப் பிரச்னையும் இருக்காது என அவர் கூறியுள்ளார்.



# இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 06

மூன்று அம்ச கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர், மதிய உணவு இடைவேளை போராட்டத்தை நேற்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக தமது போராட்டத்தை ஆரம்பித்த இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர், வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை பேரணியாக சென்று ஆளுநருக்கான மகஜரை கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கமைய வங்கி ஊழியர்களின் பயிற்சிக் காலத்தை 2 வருடங்களுக்கு மட்டுப்படுத்துக, அதிகாரிகளே பயிற்சிக் காலத்தினை நீடித்து வங்கி ஊழியர்களது உழைப்பினை சுரண்டுவதை உடனே நிறுத்துக, அதிகாரிகளே வங்கி ஊழியர்கள் உயிர் வாழ்வதற்கேற்ற ஓய்வூதியக் கொடுப்பனவை உடனே நிறுத்துக மற்றும் பிரதமரின் உத்தரவிற்கமைய இலங்கை வங்கியின் பயிலுநர் ஊழியர்களை 2 வருடங்களில் நிரந்தரமாக்குக என வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சைக்குரிய தேங்காய் எண்ணெய் மீண்டும் மலேசியாவுக்கு அனுப்பப்படும்

கொழும்பு, ஏப். 06

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள எப்லடொக்சின் அடங்கியுள்ள தேங்காய் எண்ணெயை மீண்டும் மலேசியாவுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்லடொக்சின் அடங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள 5 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களையே இன்று செவ்வாய்க்கிழமை மலேசியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் நிறுவனங்களினால் இறக்குமதி செய்யப்பட்ட 13 தேங்காய் எண்ணெய் கொள்கலன்களிளேயே எப்லடொக்சின் என்ற பதார்த்தம் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 - 03 - 1956

இறப்பு 24 - 03 - 2021

## கனகசபாபதி தவேந்திரன் (தவே)

யாழ்.நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தவேந்திரன் அவர்கள் கடந்த (24.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் (மாணிக்கம்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விசாகரத்தினம் (ராசன்), கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), தர்மதேவி (செல்வம் - அவுஸ்ரேலியா), நகுலேந்திரன் (குட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (அவுஸ்ரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதர்சினி (அவுஸ்ரேலியா), திருவுளன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஷ்ணவி(அவுஸ்ரேலியா), சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse இல் பார்வைக்காகவைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று(06.04.2021) செவ்வாய்க்கிழமை 8.45-10.45 வரை நடைபெற்று தொடர்ந்து 11.20-12.30 வரை இறுதி அஞ்சலி நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

71/17 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212221594

தகவல்
குடும்பத்தினர்.

# ஈஸ்டர் தாக்குதல்: இதுவரை ஒருவருக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் இல்லை!

கொழும்பு, ஏப். 06

'உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று ஈராண்டுகள் நெருங்கினாலும்கூட தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் நீதிமன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமெரிக்காவில்கூட வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவருக்கேனும் இலங்கை நீதிமன்றத்தில் இன்னும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அத்துடன், தாக்குதல் சம்பவத்தின் பின்னணி மற்றும் பிரதான சூத்திரதாரிகளும் கண்டறியப்படவில்லை.

அதனை நோக்கி விசாரணைகள் நடைபெறுவதாகவும் தெரியவில்லை. கட்டாயம் தாக்குதலின் பின்புலம், பிரதான சூத்திரதாரிகள் கண்டறியப்படவேண்டும். அப்போதுதான் நீதி கிடைக்கும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை தடுத்து நிறுத்தத் தவறியவர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை விரைவில் மேற் கொள்ளப்பட வேண்டும்" - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழுமையாக நேற்று முடங்கியது மன்னார்!

## மறைந்த ஆயருக்காக இனமத பேதமின்றி அஞ்சலி






**மன்னார், ஏப். 06**

**மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூத உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் பூரண கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டதோடு துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.**

வீதிகள், வீடுகள் எங்கும் கறுப்பு மற்றும் வெள்ளை நிறக் கொடிகள் பறக்க விடப்பட்டு கடைகள் அனைத்தும் மூடப்பட்டு மறைந்த ஆயருக்கு நேற்று இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாத்திரமன்றி இலங்கை முழுவதும் உள்ள பொதுமக்கள், அரச அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மதத் தலைவர்கள் என ஆயிரக்கணக்கானோர் நேற்று புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஆயரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்திற்கு அஞ்சலிக்காக கொண்டு வரப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் பல ஆயிரக்கணக்கானோர் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாகங்களிலும் கறுப்பு,வெள்ளை கொடிகள் பறக்கவிடப்பட்டு மன்னார் மறைமாவட்டம் சோக மயமாக காணப்பட்டது.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதோடு, தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம் பெறவில்லை.

## மருதனார்மடத்தில் மோ.சைக்கிள் திருடியவர் மறுநாளே சிக்கினார்

யாழ்ப்பாணம், ஏப். 06

மருதனார்மடம் பகுதியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று ஒரு நாளில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மருதனார்மடம் பகுதியில் கடந்த சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்தி விட்டு உரிமையாளர், கடைக்குச் சென்றுள்ளார்.

கடையிலிருந்து திரும்பிய போது மோட்டார் சைக்கிளை காணவில்லை. அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்த பொலிஸின் யாழ்ப்பாணம் மாவட்ட புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த விசாரணையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்றுமுன்தினம் மாலை உரும்பிராயில் கைப்பற்றப்பட்டது. அதனைத் திருடிய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார்.

28 வயதுடைய சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டார். மோட்டார் சைக்கிளும் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டது.

## ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக அனைவரும் அணி திரளவேண்டும்

### அஸ்கிரியபீட தேரர் அழைப்பு

கொழும்பு, ஏப். 06

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக எந்தவொரு கட்சி தொடர்பும் இல்லாமல் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு நாட்டு மக்கள் அனைவரும் அணி திரளவேண்டும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர், வரகாகொட சிறிஞானரத்ன மகா நாயக்க தேரர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தில் நாம் ஒரு நாடாக ஒன்று படாததமையினால் தான் எங்களுக்கு எதிரான சக்திகள் பயனடைகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் ஒரு அரசாங்கமாக நாங்கள் அதை எவ்வாறு எதிர்கொண்டோம் என்பது குறித்து பொதுமக்களுக்கு பொதுவான புரிதல் இருக்க வேண்டும் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குறிப்பிட்டார்.

## ரஞ்சனின் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஏப். 06

தமது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுத்து நீதிப்பேராணை பிறப்பிக்கு மாறு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணையின்றி நிராகரித்துள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர மற்றும் மயாதுன்ன கொரயா ஆகியோர் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, ரஞ்சன் ராமநாயக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு உட்படுத்துவதற்கான அறிவித்தலை வெளியிடுவதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுவரை பிற்போட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம்!

### அதிகளவு தண்ணீரை பருகுமாறு அறிவுரை

கொழும்பு, ஏப். 06

நேற்று முதல் 14 ஆம் திகதி வரை இலங்கையின் மீது சூரியன் உச்சமடையும் என்று வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

சூரியனின் தொடர்பான வடதிசை நோக்கிய இயக்கத்தின் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை இலங்கைக்கு நேராக உச்சம் கொடுக்கவுள்ளது.

நேற்று தெல்வத்தை, பத்தேகம, தெதியவல, முலதியன, அங்குனகொலபெலஸ்ஸ மற்றும் உடமலல ஆகிய பிரதேசங்களுக்கு மேலாக நண்பகல் 12.13 அளவில் சூரியன் உச்சம் கொடுத்தது.

நாட்டின் தற்போது நிலவும் அதிக வெப்பத்துடனான கால நிலையிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்று சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முற்பகல் 10 மணிமுதல், பிற்பகல் 2 மணிவரையான காலப்பகுதியில் வெளியில் செல்வதை மக்கள் தவிர்ப்பது சிறந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உடல் வறட்சி, தலைவலி, உடல் எரிச்சல் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமுள்ளது.

அதனால் அதிகளவு குடிதண்ணீரைப் பருகுமாறு சுகாதாரத் திணைக்களம் கேட்டுள்ளது.

## இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு நேற்று கிளிநொச்சியில் அஞ்சலி!

கிளிநொச்சி, ஏப். 06

மறைந்த மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு கிளிநொச்சியில் அஞ்சலி செலுத்தப்பட்டது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தலைமையில் காலை 7.30 மணியளவில் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் ஆரம்பமானது.

நிகழ்வில் ஆயரின் திருவுருவப் படத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து கத்தோலிக்க மத குருமார்கள் மற்றும் சின்மயாமிசன் குரு உள்ளிட்டோர் ஈகச்சுடர் ஏற்றினர்.

தொடர்ந்து அன்னாரின் மறைவுக்கான விசேட வழிபாடு இடம்பெற்றது. அந்த நேரத்தில் மறைந்த ஓய்வுநிலை ஆயருக்கு மெழுகுவர்த்தி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் கத்தோலிக்க மத குருமார்கள், கிளிநொச்சி சின்மயாமிசன் குரு, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வவுனியாவிலும் அஞ்சலி

வவுனியா, ஏப். 06

மறைந்த இராயப்பு ஜோசப் ஆண்டகைக்கு வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தில் இந்தநிகழ்வு இடம்பெற்றது. இதன்போது அன்னாரின் திருவுருவ படத்துக்கு மலர்தூவி, மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கதினமும் அனுஷ்டிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப்பட்டியலில் உள்ளோர் சிறைகளில் அடைக்கப்படுவர்!

## அறிவித்தது இலங்கை அரசு



**கொழும்பு, ஏப்.06**

**‘இலங்கையிலுள்ள பலரது பெயர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள். அத்துடன் அவர்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள்.”**

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கை அரசு அண்மையில் தடை செய்யப்பட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் தடை செய்யப்பட்ட நபர்களாக அறிவிக்கப்பட்ட சிலர் இலங்கையில் வசித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களை இலங்கை அரசு நாடு கடத்துமா என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் ஊடகங்கள் கேட்டபோது,

‘அரசு வெளியிட்ட தடைப் பட்டியலில் உள்ளவர்கள் இலங்கையில் இருந்தால் அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவோரும் சிறையில் அடைக்கப்படுவார்கள்” என்று பதிலளித்தார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேயில்லை!

### சஜித் அணி கவலை

*கொழும்பு, ஏப். 06*

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நீதி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை. எனவே, தாக்குதலின் பின்புலம் கட்டாயம் கண்டறியப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து, உடல் அவயங்களை இழந்தனர். இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றிருந்தாலும் நல்லாட்சியின்போது நீதி கிடைக்கவில்லை. அரசுக்குள் இருந்துகொண்டு நீதிக்காகப் போராடினோம்.

மேற்படி தாக்குதலை வைத்து பிரசாரம் செய்துதான் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால். இன்னும் நீதி கிடைக்கவில்லை. தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார், திட்டமிட்ட குழுவினர் யார், நிதி உதவி வழங்கியது யார் என்பன உட்பட அனைத்து விடயங்களும் கண்டறியப்படவேண்டும். அத்திசையை நோக்கி அரசு பயணிப்பதாகத் தெரியவில்லை.

அதேவேளை, மதத்தை அடிப்படையாகக்கொண்டு அமுலத்தங்களைப் பிரயோகிக்கும் தரப்புகளுடன் கூட்டணி வைக்கப் படக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளோம். அவரும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார்-என்றார்.

# நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரினார் சஜித் பிரேமதாஸ!

### ஈஸ்டர் தாக்குதலை தடுக்க தவறியமைக்காக

*கொழும்பு, ஏப். 06*

ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுமக்களிடம் மன்னிப்பு கோரியுள்ளார்.

அவர் அமைச்சரவை உறுப்பினராக இருந்தபோது தாக்குதல்கள் நடந்தமைக்கு வருந்துவதாக அவர் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரித்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை முன்மொழிந்தது.

ஆணைக்குழுவின் ஆதாரங்களின் அடிப்படையில், தாக்குதல்கள் தொடர்பான செயல்கள் அல்லது குறைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் தரப்பில் குற்றவியல் பொறுப்பு உள்ளது என்று கருதப்படுகிறது.

அந்த நேரத்தில் நாட்டின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தளர்வான அணுகுமுறை ஈஸ்டர் தாக்குதலை தடுக்க அப்போதைய அரசாங்கத்தின் தரப்பின் தோல்விக்கு ஒரு முக்கிய காரணம் என்றும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே, சஜித் பிரேமதாச ஈஸ்டர் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக மன்னிப்பு கோரியுள்ளார்.

சஜித் பிரேமதாஸ அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரனில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு, சமுர்த்தி அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடு கடத்தப்பட்டோரிடம் சி.ஐ.டி., ரி.ஐ.டி. விசாரணை

*கொழும்பு, ஏப். 06*

‘சுவிற்சர்லாந்து மற்றும் ஜேர்மனிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 24 பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.), பயங்கரவாத தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி.) என்பன விசாரணைகளை நடத்தும். அதன் பின்னரே அவர்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.” - இவ்வாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தை மீறி 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்சர்லாந்திலிருந்து 4 பேரும் சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் இராணுவத்தின் கண்காணிப்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போராடி பெறுவதே எங்களின் வரலாறு!

### இருப்பதை இழப்பதே இ.தொ.காவின் வரலாறு என்கிறார் மனோ கணேசன்

*கொழும்பு, ஏப். 06*

தனி தமிழ் “பிரிவு” என்றால், கொடுப்பதை வாங்கிக்கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம் - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு பறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

மத்திய மாகாணத்தில் ஆரம்பித்து, இப்போது ஊவா மாகாணம் வரை, “மாகாண தமிழ் கல்வி அமைச்சு” என்ற இயந்திரம் ஒழிக்கப்பட்டு, “தமிழ் பிரிவு” ஆகிவிட்டது.


ஆறு (6) தமிழர் பெரும்பான்மை பிரதேச சபைகளை நுவரெலியாவில் போராடி பெற்றது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் வரலாறு. இருப்பதையும் இழப்பது இப்போதைய வரலாறு.

தனியான தமிழ் கல்வி “அமைச்சு” என்றால் மாகாண சபை வரவு செலவு திட்டத்தில், எங்கள் பாடசாலை பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக, தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும்.

தனி தமிழ் “பிரிவு” என்றால், கொடுப்பதை வாங்கிக்கொண்டு மூடிக்கொண்டு இருக்க வேண்டும். இதுதான், வித்தியாசம். எழுதி வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் நாம் வருவோம். மீண்டும் பெறுவோம்.-என்றுள்ளது.

# அரசின் முறையற்ற செயற்பாட்டுக்கு எதிராக மக்கள் அனைவரும் குரல் கொடுக்கவேண்டும்

### அழைக்கிறார் ரணில் விக்கிரமசிங்க



*கொழும்பு, ஏப். 06*

அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாட்டுகளுக்கு மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி குரல் கொடுக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுகேகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-சிங்கராஜவனத்தில் நீர்தேக்கம் ஒன்றை அமைத்து அதனூடாக அம்பாந்தோட்டைப் பகுதிக்கு நீர் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

குறித்த செயற்பாடு வனப் பாதுகாப்பு சட்டத்திற்கு முரணானது என்பதுடன் சிங்கராஜவனத்திலுள்ள ஒரு மரத்தையேனும் வெட்டுவதுகூட சட்ட விரோத செயற்பாடாகவே சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த வனம், நாட்டின் பிரதான மழைக்காடாக இருக்கின்றது. இந்நிலையில் இப்பகுதியில் நிலப்பகுதிகளும் சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிக்கப்படுகின்றன.

குறித்த சட்டவிரோத செயற்பாட்டை, அரசாங்கம் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும். அத்துடன் இந்த வனத்தை பாதுகாப்பதற்கு அனைத்து மக்களும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும்-என்றார்.

# இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றுமதி தடையில்லை

## இந்தியத் தூதரகம் அறிவிப்பு

*கொழும்பு, ஏப். 06*

கொரோனா தடுப்பூசிகளுக்கு இந்தியா எந்த ஏற்றுமதி தடையும் விதிக்கவில்லை என இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுடில்லியில் உள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் சமீபத்தில் கொரோனா தடுப்பூசிகளுக்கு எந்தவொரு ஏற்றுமதி தடையும் விதிக்கவில்லை என தெளிவாகக் கூறியதாகக் குறிப்பிட்டார்.

உலகின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள பல நாடுகளுக்கான தடுப்பூசி ஏற்றுமதி கடந்த வாரமும் நடந்துள்ளன என்றும் இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

மேலும் எந்தவொரு நாடும் தனது சொந்த மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும்போது, உலக நாடுகளுக்கு தடுப்பூசிகளை இவ்வளவு பெரிய அளவில் பகிர்ந்துகொள்ளவில்லை.

இந்த ஆண்டு ஜனவரியில் இந்தியாவில் இருந்து பரிசாக முறையாக அங்கீகரிக்கப்பட்ட அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளின் வருகை, இலங்கையில் உள்ள பயங்கரமான தொற்று நோய்க்கு எதிரான தடுப்பூசியை செலுத்தும் திட்டம் தொடங்குவதற்கு உதவியது.

இலங்கையின் நெருங்கிய நண்பராகவும், அண்டை நாடாகவும் உள்ள இந்தியாவில், கொரோனா தடுப்பூசி செலுத்த ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களிலே, இலங்கை மக்களும் பயனடையத் தொடங்குவதை இந்தியா உறுதி செய்தது.

1.25 மில்லியனுக்கும் அதிகமான டோஸ் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிஷீல்ட் தடுப்பூசி இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இரண்டாவது கொரோனா அலை இந்தியாவில் ஏற்பட்டுள்ளமையால், தடுப்பூசி பற்றாக்குறை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவலை தெரிவித்த இந்தியா, எவ்வாறிருப்பினும் தடுப்பூசிகளுக்கு எந்தவொரு ஏற்றுமதி தடையும் விதிக்கவில்லை என்றும், தடுப்பூசிகளின் உற்பத்தி மேலும் அதிகரிக்கப்படுவதாகவும் கூறியுள்ளது-என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நான் ஏன் அகண்ட திராவிடம் பேசக்கூடாது?”

## கமல்ஹாசன் பேட்டி:



தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் வரும் 6ஆம் தேதி நடைபெற வுள்ள நிலையில், அதற்கான தேர்தல் பரப்புரை நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலையுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், கடந்த ஒரு மாதமாக மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல் ஹாசன் தமது கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.. காலில் செய்யப்பட்டிருக்கும் அறுவை சிகிச்சையில் இருந்து முழுமை யாக மீளவில்லை என்றாலும் அவர் தொடர்ந்து பயணம் செய்தார். இதற்கு நடுவில், தமிழக சட்டமன்ற தேர்தல், திராவிட கட்சிகள், பிராமணர் - பிராமணர் அல்லா தோர் விவகாரம் ஆகியவை குறித்தெல் லாம் கோயம்புத்தூரில் பிபிசி தமிழ் செய்தி யாளர் முரளிதரன் காசி விஸ்வநாதனிடம் பேசினார் கமல். அவரது பேட்டியிலிருந்து:

**கே:** மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்திருக்கிறீர்கள். உங்களைப் பொறுத்த வரை நிலவரம் எப்படியிருக் கிறது?

**ப:** மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பு இருக்கிறது. அது வாக்காக மாற வேண் டும். இந்தப் பணநாயக விளையாட்டில் ஜனநாயகம் ஜெயிக்க வேண்டும்.

**கே:** பல இடங்களுக்கும் பயணம் செய்திருக்கிறீர்கள்...இந்தத் தேர்தலின் முக்கியப் பிரச்னையாக எந்தப் பிரச்சனை இருக்கிறது என நினைக்கிறீர்கள்?

**ப:** ரொம்பவும் எளிதான பிரச்னை கள்தான். எனக்கு வியப்பாகக் கூட இருக் கிறது. நான் அரசியல் களத்துக்கு புதிதாக வந்த ஒரு நபர். மக்கள் சேவையில் எங்க ளுக்கு அனுபவம் இருக்கிறது என்றாலும் கூட, அந்த அனுபவமேகூட இந்தக் குழப்பத்திற்குக் காரணமாக இருக்கலாம். அடிப்படை வசதிகளைக்கூட செய்து தராமல் என்ன நடந்துகொண்டிருந்தது என்று தோன்றுகிறது. அடிப்படை வசதிகளைக்கூட செய்துதராமல் அப்படி என்ன சுயநலம்? விளம்பரத்திற்குக்கூட நல்லது செய்யவில்லை. ஏழ்மையை வெகு ஜாக்கிரதையாக பாதுகாத்து வைத்திருக் கிறார்கள். அந்த அவலங்களைப் போக்க பெரிய செலவு ஒன்றும் ஆகிவிடாது. ஆனால், வேண்டுமென்றே ஏழ்மையை அருங்காட்சியகத்தில் பாதுகாப் பதைப்போல பாதுகாக்கிறார்களோ என பயமாக இருக்கிறது.

**கே:** ஆனால், தமிழ்நாடு எல்லா சமூகநலக் குறியீடுகளிலும் இந்தியா விலேயே சிறந்த மாநிலங்களில் ஒன் றாகத்தானே இருக்கிறது...

**ப:** நம்முடைய ஒப்பிடுதல் இந்தி யாவோடு இருக்கக் கூடாதோ என்னவோ. வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் நியாயம். அப்போதுதான் நாமும் வளர முடியும். வங்கப் பஞ்ச காலத் தோடு ஒப்பிட்டு பார்த்தால் சிறப்பா கத்தான் இருக்கும். அல்லது பிஹாரைப் பார்த்து நாம் சிறப்பாக இருக்கிறோம் என நினைத்துக்கொள்வது சரியா? கேரளா வைப் பார்த்து ஏன் நாம் பொறாமைப் படுவதில்லை? அங்கே இருக்கக்கூடிய எழுத் தறிவை தமிழ்நாடு முந்த வேண்டாமா?

எங்களிடம் நிறைய மருத்துவமனைகள் இருக்கிறது என்கிறார்கள். எல்லாம் இயங்காத மருத்துவமனைகள். அரசு பிரமாதமாக நடத்திக்கொண்டிருக்கும் தொழில் என்னவென்று எல்லோருக்கும் தெரியும். டாஸ்மாக் தான் அது. அதைப் போல எல்லாத் துறையிலும் வெற்றிபெற் றால், தமிழ்நாடு முதலிடத்தில் இருக்க வாய்ப்பிருக்கிறது.

**கே:** தற்போதைய தமிழக அரசு எந்திரம் முழுமையாகத் தோல்விய டைந்துவிட்டது எனக் கருதுகிறீர்களா?

**ப:** தோல்வியடைந்து விட்டது என்பதைவிட, ஊழல்மயமாகியிருக்கிறது என்பதுதான் முக்கியம். அரசு எந்திரம் தோற்கவில்லை. தோற்கவைத்துவிட் டார்கள். அதற்கு முக்கியக் காரணம், 30 சதவீதம் கமிஷன். எல்லாவற்றிலிருந்தும் 30 சதவீதத்தை எடுத்துவிட்டால், ஆரோக் கியமற்ற சூழல் ஏற் பட்டுவிடும். இப்படி யாக, தீவிர சிகிச்சைப் பிரிவில் தமிழ்நாடு இருக்கிறது.

**கே:** ஊழல் தொடர்பாக நீங்கள் தொடர்ந்து பேசிவருகிறீர்கள். ஆனால், மக்கள் பணத்தை வாங்கிக்கொண்டு வாக் களிப்பதாகவும் குற்றம்சாட்டுகிறீர்கள். இந்தச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவது





முரளிதரன் காசி விஸ்வநாதன்
- பிபிசி தமிழ் -

எந்த அளவுக்கு சாத்தியம்?

**ப:** தலைமைக்கு நேர்மை இருந்தால் அது எல்லா இடங்களிலும் அருவிபோல பரவிவிடும். பாறையும் நனைந்துவிடும்.

**கே:** மக்கள் நீதி மய்யத்தைப் பொறுத் தவரை இது இரண்டாவது தேர்தல். இந்தத் தேர்தலின் முடிவுகள் மக்கள் நீதி மய்யத்திற்கு எந்த அளவுக்கு முக்கியம்?

**ப:** இந்தத் தேர்தலில் களமிறங்கிய போதே மக்கள் ஒரு செய்தியைத் தெளி வாகச் சொல்லிவிட்டார்கள். தேர்தல் அரசியலில் மய்யம் இனி பெரும் பங்கு வகிக்கும். எப்படி என்பதை மக்கள் இன் னும் சொல்லவில்லை. ஆனால், நீங்கள் இல் லாமல் இனி தமிழக அரசியல் இல்லை என்பதை எல்லோருமே சொல்கிறார்கள். சில பேர் சந்தோஷத்திலும் ஆர்வத்திலும் இப்போதே ஜெயித்தாகிவிட்டது என் கிறார்கள். என்னைப் பொறுத்தவரை வெற்றி என்பது தேர்தலில் வெல்லுவது அல்ல. கொடுக்கப்பட்ட இலக்குகளை ஐந்து வருடத்தில் செய்து முடிப்பதுதான் வெற்றி. அப்படிப்பார்த்தால், என்னைப் பொறுத்தவரை நான் வெற்றியை நெருங்கக்கூட ஆரம்பிக்கவில்லை.

**கே:** இந்தத் தேர்தலில் நீங்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெறும் நிலையில், உங்களுடைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும்.. தொடர்ந்து சினி மாவில் நடிப்பீர்களா.. மக்களுடைய பிரச்னை களுக்காக போராட் டங்களை நடத்துவீர்களா?

ப. என்னுடைய பல வேட்பாளர்கள் வேறு வேலை செய்தபடிதான் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். பொன்னுசாமி என்று ஒருவர் இருக்கிறார். அவர் வேலை பால் விநியோகம். அவர் அரசியலுக்கு வருவதால் அதை நிறுத்தப்போவதில்லை. நானும் அப்படித்தான். சினிமாவுக்கென நானும் நேரம் ஒதுக்குவேன். ஆனால், குறைவான நேரம் ஒதுக்குவேன். எனக்கு நிறைய சம்பளம்கொடுக்கிறார்கள். ஆனால், நிறைய வேலை செய்ய வேண்டியதில்லை.

**கே:** உங்களுடைய சமீபத்திய பரப் புரையில் நான் 25 வருடத்திற்கு முன்பே வந்திருக்க வேண்டும் என்று சொல்லியிருக் கிறீர்கள்... ஆனால், அந்த காலகட்டத்தில் அரசியலுக்கே வர மாட்டேன் என பேசிக் கொண்டிருந்தீர்கள். உங்களை அரசிய லுக்கு இழுத்து வந்தது எது? மனமாற்றம் எப்படி ஏற்பட்டது?

**ப:** தலைமையின் தரம் கொஞ் சம் கொஞ்சமாக குறைந்து விட்டதுகூட காரணமாக இருக்கலாம்.

**கே:** கடந்த 25- 30 ஆண்டு காலத் தலைமைகளைச் சொல் கிறீர்களா?

**ப:** 30 - 35 ஆண்டுகளில் படிப் படியாக தரம் குறைந்துவிட்டது. தலைமைப் பொறுப்பே இப்படி இருந்ததென்றால், தொண்டர்கள் எப்படி இருப்பார்கள் என்ற சந்தேகம் எல்லோ ருக்குமே வந்து விட்டது.

**கே:** தமிழ்நாடு நீண்ட நாட்களாக இரு மொழிக் கொள்கையைப் பின்பற்றி வரு கிறது. உங்களுடைய தேர்தல் அறிக்கை யில் ஓரிடத்தில் மும்மொழிகள் கற்பிக்கப் படும் என வருகிறது. மற்றொரு இடத்தில் இரு மொழிக் கொள்கை குறித்து வரு கிறது. மொழிகளைக் கற்பிப்பதில் அடிப் படையில் மக்கள் நீதி மய்யத்தின் கொள்கை என்ன?

**ப:** அண்ணா சொன்னதுதான். அண் ணாவும் மும்மொழிக் கொள்கையை ஆதரித் தார். அவர் இரண்டு பேசுவதைப் போல இருக்கும். ஆனால், ஒன்றுதான் பேசினார். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்றார். இது இரண்டு விஷ யத்தைப் போல இருக்கும். ஆனால், ஒன்றுதான். ஆகவே, என்னைப் பொறுத் தவரை தேவைக்கேற்றபடி செய்ய வேண் டும் என்பதுதான்.

**கே:** ஆகவே, இந்த விஷயத்தில் அண் ணாவை ஏற்றுக்கொள்கிறீர்கள்...

**ப:** நான் நவீன அரசியல்வாதி என்ப தால் எல்லோரிடமும் இருக்கும் நல்ல விஷயங்களைத் தேர்வுசெய்து சாப்பிட முடியும். ஊநவெநசளைஅ என்பதில் மக் களை மய்யப்படுத்துவதால் இப்படித்தான் இருக்க வேண்டும் அப்படித்தான் இருக்க வேண்டுமென்ற வீம்பு எங்களிடம் கிடையாது.

**கே:** இந்த சட்டமன்ற தேர்தலில் கோவை தெற்குத் தொகுதியில் போட்டி யிடுகிறீர்கள்.. ஏன் இந்தத் தொகுதியைத் தேர்வுசெய்தீர்கள். இந்தத் தொகுதியின் பிரச்னைகள் குறித்து உங்களுக்குத் தெரி யுமா?

**ப:** கண்டிப்பாக. நிச்சயமாக எனக்குத் தெரியும். தவிர, இந்தத் தொகுதியை ஒரு உதாரண களமாக நான் நினைக்கிறேன். அதற்கான எல்லா சிக்கல்களும் இதில் இருக்கிறது. எல்லாத் தகுதிகளும் இந்தத் தொகுதிக்கு இருக்கிறது. இது ஒரு மான்செஸ்டராக முடியும்.

எங்களைப் பொறுத்தவரை, புதிதாக மாண்பை உருவாக்குகிறோம் என்பதில்லை. இழந்த மாண்பை மீட்கிறோம் என்பது தான். அப்படிப் பார்க்கும்போது இங்கே மத நல்லிணக்கம் ஒரு சவாலாக இருக் கிறது. அதைக் கையில் எடுக்க வேண்டு மென நினைக்கிறேன். தவிர, இங்கே பா.ஜ.க. ஜெயித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் வந்தார்கள். அந்த நம்பிக் கையைத் தகர்த் துக் காட்ட வேண்டு மென்ற ஒரு வீம்பும் இருக்கிறது.

**கே:** தமிழகத்தின் முக்கியமான தலைவர்களான பெரியார், அண்ணா, ராஜாஜி ஆகியோரின் கருத்துகளோடு எந்த அளவுக்கு நீங்கள் நெருக்கமாக இருக்கிறீர்கள்...

**ப:** காலத்தின் கட்டாயம்தான் தி.மு.க. நீதிக் கட்சியிலிருந்து இதைச் சொல்ல வேண்டும். ஆதி திராவிடர்கள் என்ற சொற்றொடரை உருவாக்கி, இது நம் அர சியல் திட்டத்தில் இடம்பெற வேண்டு மென முடிவு செய்தார்கள். இதைச் சுதந்தி ரத்திற்கு முன்பே செய்தார்கள். நீதிக் கட்சி யில் தெலுங்கர்கள், மலையாளிகள், கன்ன டர்களும் பங்கு வகித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை, இம்மாதிரி தென்னகம் முழுக்க வரவேண்டுமென நினைக்கிறேன். என்னுடைய திராவிடம் அதுதான். என்னைப் பொறுத்தவரை திராவிடம், நாடு தழுவியது. அதை மூன்று குடும்பங்களுக்குள் அடக்க இயலாது.

**கே:** இந்த சித்தாந்தத்தை நாடு தழுவிய அளவில் கொண்டுசொல்ல முடியுமென நினைக்கிறீர்களா?

**ப:** கண்டிப்பாக. திராவிடம் என்பது வெறும் சித்தாந்தம் மட்டுமல்ல. நம் முடைய உருவ அமைப்பு, வாழும் பகுதி எல்லாவற்றையும் குறிப்பிடும் சொல் அது. நீங்களும் நானும் வெவ்வேறுவிதமான திராவிடர்கள். ஆனால், உதட்டின் அமைப் பைவைத்து திராவிடர் எனக் கண்டுபிடித்து விடுவார்கள். வெள்ளைக்காரர்களுக்கு இன்னும் சிறப்பாக இது புரியுமென நினைக்கிறேன். வட இந்தியனுக்கு இன்னும் தெளிவாகத் தெரியும். நான் சிவப்பு என்று வேண்டுமானால் சொல் லிக்கொள்ளலாம். ஆனால், வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு நாம் இரு வருமே கறுப்பர்கள்தான். நமக்குத்தான் அது புரியவில்லை.

ஆகவே, திராவிடம் என்பது நாடு தழுவியது. மொஹஞ்சதரோ, ஹரப்பா விலிருந்து இது வருகிறது. அவர்கள் அகண்ட பாரதம் பேசும்போது, நான் ஏன் அகண்ட திராவிடம் பேசக்கூடாது? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஆயுதப் புரட்சியுடன் ஆரம்பமான ஓர் அரசியல் கட்சியின் வரலாறு

- சேகு -



## ஜே.வி.பி. கிளர்ச்சியின் 50 வருட நிறைவு

மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி இடம்பெற்று நேற்றுடன் 50 வருடங்கள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன. 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி ரோஹனா விஜயவீர தலைமையிலான இந்த கிளர்ச்சி போராட்டம் ஆம்பிக்கப்பட்டது,

இலங்கைக் கம்யூனிஸ்ட் (சீன சார்பு) கட்சியில் இருந்து பிரிந்து சென்ற ரோகண வீஜயவீர 1965 மே 14 அன்று மக்கள் விடுதலை முன்னணியை நிறுவினார். சோசலிச சமத்துவத்திற்குப் பாடுபடப் போவதாகக் கட்சி அறிவித்தது. அது தொடர்பாக அரசியல் வகுப்புக்கள் பலவற்றை நடத்தினர். இவற்றால் கவரப்பட்ட படித்த கிராமப்புற இளைஞர்கள், மாணவர்கள், தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் பெருமளவாக ஜே.வி.பி.யில் இணைந்தனர். இரகசிய மான முறையில் ஆயுதப் புரட்சிக்கு வேண்டிய ஆயத் தங்களையும் செய்து வந்தனர்.

அரச அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் ஏப்ரல் 5 ஆம் திகதி இரவு நாடு முழுவ தும் அமைந்திருந்த 92 பொலிஸ் நிலையங்கள் மக்கள் விடுதலை முன்னணியினரால் தாக்கப்பட் டது

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் ஆயுதப் போராட் டத்தின் மூலம் அரச அதிகா ரத்தைக் கைப்பற்றும் நோக்கில் எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவாகும்

தலைவர் சிறைக்குள் இருக்கும்பொழுதே 1971 ஏப்ரல் 5ம் திகதி இலங்கை அரசிற்கு எதிராக ஜேவிபியினர் நாட்டின் பல பாகங்களில் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். பல பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. தெற்கின் பல பாகங்கள் ஜேவிபியின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கிளர்ச்சியினை முறியடிக்க இலங்கை அரசாங்கம் சர்வதேச உதவியினைக் கோரியது. உதவிக்கு விரைந்த இந்தியா, சீனா நாடுகளின் உதவியுடன் ஆயுதக் கிளர்ச்சி இரண்டு வார காலத்தினுள் அடக்கப்பட்டது. ஜேவிபி உறுப்பி னர்கள் உட்பட பல்லாயிரக்கணக் கானோர் கொல்லப்பட்டனர்.

ஏப்ரல் கலவரத்தின் போது கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு 92 போலீஸ் நிலையங்கள் இலக்கானது அவற்றில் முழுமையாக 57 அழிக்கப்பட்டன, டெனியா, உராகா, ராஜங்கனாயா, கதிகமாம் மற்றும் வாரகபோலா ஆகிய போலீஸ் நிலையங்கள் ம.வி முவினரினால் கைப்பற்றப்பட்டன, மேலும் 43 போலீஸ் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டது

ஏப்ரல் கிளர்ச்சியின் போது 37 பொலிஸாரும் 26 இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டனர், அதேபோல கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 41 ஆகும்.

அப்போது இருந்தது சிறிமாவோ பண்டாரநாயக்க மற்றும் இடதுசாரிகள் தலைமையிலான ஐக்கிய முனன்ணி அரசாங்கத்தின் அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்களின்படி, 1,200 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையாக கொல்லப்பட்ட கிளர்ச்சியாளர்களின் எண்ணிக்கை 5,000 திற்கு அதிகம் எனவும் சொல்லப்படுகின்றது.

இதன் போது 18,000 பேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும் அவர்களில் 4,200 பேர் பொது மன்னிப்பின் கீழ் சரணடைந்தவர்கள் என்றும் தகவல்கள் சொல்கின்றன இதன் பொது தற்காலிக சிறைச்சாலைகளாக களனி பல்கலைக்கழகம் மற்றும் ஜெயவர்த்தபுர பல்கலைக் கழகங்கள் மாற்றப்பட்டன ,

ஏப்ரல் கிளர்ச்சியின் பின் னர், நான்கு விசாரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டு 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10 முதல் 1976 நவம்பர் 4 வரை 140 விசாரணைகளை நடத்தப்பட்டுள்ளது , இதில் எழுச்சியின் வழக்கு விசாரணை களும் உள்ளடங்கு கின்றன, இதன் போது 3,908 பேர் குற்றவாளி களாக அடையாளம் அறிவிக்கப்பட்டதுடன், அவர்களில் 3014 பேர் ஆணைக் குழுக்களில் ஆஜர்படுத்தப் பட்டதுடன் 894 பேரை கைதுசெய்ய முடியாமல் போயுள்ளது இவர்களுள் தண்டனைகள் வழங்காமல் விடுதலை செய்யப்பட் டவர்கள் 2492 நபர்கள். அதேபோல் கடின வேலையுடன் சிறைத் தண்டனை வழங்கப் பட்டவர்கள் 390 நபர்கள் , இதில் மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் ரோஹன விஜேவீரே உட்பட ஐவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப் பட்டது. மேலும் 104 பேர் வழக்கில் இருந்து விடுதலை செயப்பட் டதுடன் 41 பேருக்கு எதிரேகா வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கிளர்ச்சியின் தலைவராக இருந்த ரோஹன விஜேவீர 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 திகதி அம்பாறையில் வைத்து கைது செய்யப்பட்டதுடன், அவருடன் கெல்லி சேனாநாயக்க, நிசங்கா, பிரேமரத்னே, லால் சோமசிறி மற்றும் எல்பிட்டியாவைச் சேர்ந்த ஏ. பிரேமசேனனும் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைக்கு அனுப்பப் பட்டனர். பின்னர் மார்ச் 15ஆம் திகதி காலை அவர்கள் கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப் பட்டனர். அதன் பின்னர் 1977 ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வென்ற ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான ஐதேக அரசாங்கம் ரோஹண வீஜயவீரவை விடுதலை செய்ததுடன் ஜேவிபி மீதான தடையினையும் நீக்கியது.

ஜே.வி.பி. நாடாளுமன்ற ஜனநாயக முறைக்குத் திரும்புவதாக அறிவித்தது டன், தேர்தல்களிலும் பங்குபற்றினர். 1982 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜேவிபியின் வேட்பாளராக ரோகண வீஜயவீர போட்டியிட்டு 275,000 வாக்குகளைப் பெற்றார்.இவை அப்போது இடம்பெற்ற விடயங்களாக உள்ளது.

இதன் பின்னர் கொழும்பில் 1983 ஜூலையில் இடம்பெற்ற இனக்கலவரத்தினை அடுத்து அக் கலவரத்திற்கு ஜேவிபியினரே காரணமெனக் கூறி இலங்கை அரசால் மீண்டும் அந்த அமைப்பு தடை செய்யப்பட்டது. இதன் பின்னர் ஜேவிபினர் தலைமறைவாக இயங்கத்தொடங்கினர்.

இரண்டாவது கிளர்ச்சியானது 1986 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆண்டு கலப்பகுதிவரை இடம்பெற்றது. இது விஜேவீர தலைமையில் இடம்பெற்றது, இத பொது 67,652 பேர் காலம் அல்லது உயிரிழந்து போயிருப்பதாக மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவிக்கின்றன , இவர்களில் 6,661 கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டனர், மீதமுள்ளவர்கள் பாதுகாப்பு படையினரால் கொல்லப்பட்டனர் என்றும் சொல்லப்படுகின்றது. இவை நேரடியாக மற்றும் மறைமுகமாக இராணுவத்துடன் தொடர்பு பற்றிருந்ததாகவு கூறப்படுகின்றது.

1990ஆம் ஆண்டிட்டிக்கு பின்னர் ஜே.வி.பி. கட்சியானது புதிய தலை மைத்துவத்தின் கீழ் 1990 ன் பின்னர் மீள் கட்டியெழுப்பப்பட்டது. 1994 ம் ஆண்டிலிருந்து இடம் பெற்ற சகல தேர்தல்களிலும் பங்குபற்றி வருகின்றது.

2001ம் ஆண்டு இடம்பெற்ற பொதுதேர்தலில் 9 வீத வாக்குகளைப் பெற்றனர். 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில் இலங்கை சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு கூட்டணி ஆட்சி அமைத்தனர்.

இந்த கிளர்ச்சி தொடர்பில் இன்னும் பல தகவல்கள் விடையங்கள் உள்ளன அவை தொடர்பில் பிறிதொரு பதிவில் தரலாம். மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் இடம்பெற்று ஏப்ரல் 5 ஆம் திகதியான நேற்றுடன் 50 வருடங்கள் ஆகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**34–A**

02. **Problem Solving** பிரச்சனையை தீர்த்தல்

இதன் அடிப்படை வருமாறு

உங்கள் அனுபவத்தையும் ஆற்றலையும் கொண்டு தரப்படும் பிரச்சனையை தீர்க்க முற்படுதல்

02A. வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படல்.


**2015 38,**

எண் 16 இனது மூன்று மடங்கு 48 ஆகும். நான்கு எண்களின் கூட்டுத் தொகை 200 ஆயிருக்க வேண்டும்.

**16 + 48 + 52+ 84 = 200**

இதன்படி சரியான விடை **01**

**2015 39**





**2 x 3 x 1= 6**

எண் கோலத்தினைக் கவனியுங்கள். வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படுங்கள் சிறிய முக்கோணங்களிலுள்ள தானங்களைப் பெருக்கி கிடைக்கும் பெறுமானம் நடுச் சதுரத்தில் உள்ளது.

சிறிய முக்கோணங்களிலுள்ள தானங்களைப் பெருக்கி கிடைக்கும் பெறுமானம் நடுச் சதுரத்தில் உள்ளது.

**3 x 4 x 2= 24** இதன் பிரகாரம்






**4 x 5 x 3= 60**

எனவே சரியான விடை 02

**2016 25**

எண் கோலத்தினைக் கவனியுங்கள். வெற்றுப்பகுதியை நுண்ணறிவு கொண்டு நிரப்ப முற்படுங்கள.

பின்வரும் செட்டைகளின் ஒழுங்கினைக் கவனியுங்கள் இது 2 இனால் கூடிச் செல்லுகின்றது.



ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# சிங்கராஜ வனத்தை வைத்து எதிர்க்கட்சி அரசியல் லாபம்

## விமலவீர திஸாநாயக்க விசனம்

அம்பாந்தோட்டை, ஏப்.06

சிங்கராஜ வனப்பகுதி அழிக்கப்படுவதாகக் கூறி எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றனர் என்றும் கிராமப்புற மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடு என்று யாரும் கருத முடியாது எனவும் வனப்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.



அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சிங்கராஜ வனப்பகுதியின் நிலப்பரப்பு ஆக்கிரமிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டது. இவ்விடயம் குறித்து முறையான விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு விவகாரம் தற்போது அரசியல்மயப்படுத்தப்பட்டு விட்டது. சிங்கராஜ வனப்பகுதி குறித்து முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தைப் பல வீனப்படுத்தும் சூழ்ச்சிகள் உள்ளக மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. உள்ளக மட்டத்தில் சுற்றுச்சூழல் விவகாரம் பிரதான குற்றச்சாட்டாக காணப்படுகிறது.

வனப்பகுதியை அண்மித்த பகுதிகளில் வாழும் மக்களின் அத்தியாவசிய தேவைகளைப்பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு காணப்படுகின்றது. கிராமப் புறங்களின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அபிவிருத்தி நிர்மாணப் பணிகளை முன்னெடுக்கும் போது அதனைச் சுற்றுச்சூழலுக்கு எதிரான செயல்பாடு என யாரும் குறிப்பிட முடியாது.

நல்லாட்சி அரசாங்கத்தில் வில்பத்து காடு அரச அதிகாரத்துடன் அழிக்கப்பட்டது. இவ்விடயம் குறித்து தற்போது சூழலியலாளர்கள் எனக் குறிப்பிட்டுக் கொள்பவர்கள் எவரும் அன்று எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அரசாங்கம் எவ்வித அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்கவில்லை. வனப் பகுதியின் பரப்பை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன- என்றார். (எ)

# வவுனியாவில் புதையல் தோண்டிய பிக்குகள் உட்பட 11 பேருக்கு மறியல்

வவுனியா, ஏப்.06

வவுனியா, பூவரசங்குளம்பகுதியில்புதையல் அகழ்வில் ஈடுபட்ட இரு பிக்குகள் உட்பட 11 பேரை ஏப்ரல் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பூவரசங்குளம், தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளாகத்தில் புதையல் அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபர்களை கைது செய்தனர்.

இவர்களிடமிருந்து நிலத்தை தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மீட்கப்பட்டதுடன், 2 கார்கள் மற்றும் ஓட்டோவையும் பொலிஸார் பறிமுதல் செய்திருந்தனர். இந்நிலையில் சந்தேகநபர்களை நேற்று வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோதே நீதிவான் இவர்களை ஏப்ரல் 9 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (எ)

# ரூ. 13 மில். பெறுமதியான தங்கம் கட்டுநாயக்காவில் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.06

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மறைத்து வைத்திருந்த நிலையில் 13 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மூன்று பொதிகளாக இருந்த ஒரு கிலோ 500 கிராம் நிறையுடைய தங்கம் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பொதிகள் விமான நிலைய மலசல கூடத்திற்கு அருகிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு முன்னரும் தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் பொலிஸாரால் கைது

வாழைச்சேனை, ஏப்.06

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட 36 மற்றும் 45 வயதுடைய இரண்டு பெண்களை பிறைந்துரைச்சேனை பகுதியில் வைத்து கைது செய்ததாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து புலனாய்வுப் பிரிவினர் வாழைச்சேனைப் பொலிஸார் மற்றும் சிறுவர் மகளிர் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியின் உதவியுடன் இரண்டு பெண்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் ஒருவரிடமிருந்து 500 மில்லி கிராம் ஹெரோயின் 23550 மில்லி கிராம் கேஜி போதைப்பொருள் 60 போதை மாத்திரைகளும் மற்ற பெண்ணிடமிருந்து 17330 மில்லி கிராம் கேஜி போதைப் பொருள் 25 போதை மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வுப்பொருள்கள் இறக்குமதியில் மோசடி அரசு கடும் நடவடிக்கை எடுப்பது அவசியம்



## ரிஷாட் பதியுதீன் வலியுறுத்து

கிண்ணியா, ஏப்.06

**மக்களின் நாளாந்த நுகர்வுப் பொருள்களான சீனி மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றின் இறக்குமதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி, அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வலியுறுத்தியுள்ளார்.**

கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் காங்கிரஸின் மத்திய குழு உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சீனி மோசடியாளர்களை விரைவில் இனம்கண்டு அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விடயம் கோப் குழுவுக்கு வந்துள்ளது.

கொள்ளையடித்த பணத்தை மீள அரசுக்கு வழங்க வேண்டும். தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் ஏற்படுத்தும் இரசாயனம் சேர்க்கப்பட்டுள்ளது. இனிமேல் இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறக்கூடாது. யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்- என்றார். (எ)

# ஹெரணவில் காரை விபத்துக்குள்ளாகிவிட்டு தலைமைறைவானார் கார்ச் சாரதி!

ஹற்றன், ஏப்.06

வாகனத்தை விபத்துக்குள்ளாக்கிவிட்டு தலைமறைவான சாரதியை கைது செய்யும் நடவடிக்கையில் ஹற்றன் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

நுவரெலியா வசந்த காலத்துக்கு வந்து மீண்டும் ஹெரண பகுதிக்குச் சென்ற காரொன்றே அட்டன் கொழும்பு பிரதான வீதியில் செனன் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

குறித்த காரில் சாரதி உட்பட நால்வர் பயணித்த நிலையில் மதுபோதையில் காரை செலுத்திய சாரதி வாகனத்தை நடுவீதியில் செலுத்தியுள்ளார். இதனால் ஏனைய வாகனங்களுக்குப் பயணிக்க முடியாதவகையில் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இவ் வழியில் வந்த ஏனைய வாகன சாரதிகளுக்குமிடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளதையடுத்து மது போதையில் காரை பள்ளத்தில் செலுத்தி விபத்துக்குள்ளாக்கியுள்ளதாக தெரிய வருகிறது.

விபத்துக்குள்ளான காரை விட்டு விட்டு தலைமறைவான சாரதியை கைது செய்ய ஹற்றன் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# புத்தாண்டை முன்னிட்டு விஷேட ரயில் சேவைகள்

கொழும்பு, ஏப்.06

தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விஷேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் எதிர் வரும் 9 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் இவ்வாறு விஷேட ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# மொஹான் பீரிஸ் நீக்கம் சட்டரீதியானது அல்ல!

## அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்

கொழும்பு, ஏப்.06

முன்னாள் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ், பதவியிலிருந்து நீக்கப்பட்டமை சட்டரீதியாக மேற்கொள்ளப்படவில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் மொஹான் பீரிஸ் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு சட்டரீதியாக நியமிக்கப்பட்டவரை, ஜனாதிபதியின் விருப்பப்படி அவருடைய செயலாளரின் கடிதத்தின் ஊடாக நீக்க முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுஜன பெரமனவின் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித பண்டார தென்னக்கோன், மொஹான் பீரிஸ் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் நேற்றுப் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அலி சப்ரி இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த வேளையில், அவரது அறிவுறுத்தலின் பேரில், ஜனாதிபதியின் செயலாளர், அப்போதைய தலைமை நீதிபதி மொஹான் பீரிஸுக்கு பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்.

இது தவறான நடவடிக்கை. இந்தத் தவறை சரிசெய்ய வேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தற்போதைய அரசாங்கம் தயாராகவுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தேவையான ஆலோசனைகளைப் பெறுவோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சம்பள உயர்வு வர்த்தமானிக்கு எதிரான மனு விசாரணைக்கு

கொழும்பு, ஏப்.06

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக அறிவிப்பதற்கு அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை செயலற்றதாக்குமாறு ரிட் மனு ஒன்றை வெளியிடுமாறு கோரி 20 தோட்ட நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு உட்படுத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் அர்ஜூன ஒபேசேகர மற்றும் மாயாதுன்ன கொரயா ஆகிய நீதிபதிகளினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனு தொடர்பான விசாரணைகளை மே மாதம் 5 ஆம் திகதி நடத்தத் தீர்மானித்துள்ளதுடன் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை விடுக்கமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த மனுவின் பிரதிவாதிகளாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, தொழிலாளர்கள் ஆணையாளர் உட்பட 19 பேரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சதொச நிலையத்தில் சலுகை விலையில் உணவுப்பொருள்கள்

கொழும்பு, ஏப்.06

பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்குத் தேவையான உணவுப் பொருள்களை சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக சலுகை விலையில் பெற்றுக் கொள்ள முடியும் என அதன் தலைவர் ஆனந்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் அடங்கிய சலுகைப் பொதியை சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுதவிர மேலும் 27 பொருள்கள் விஷேட சலுகை விலையின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டரிசி, வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி என்பவற்றை போதியளவில் கொள்வனவு செய்து கொள்ள முடியும். இம்மாதம் 13ஆம் 14ஆம் திகதிகள் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தினங்களிலும் சதொச விற்பனை நிலையம் திறந்திருக்கும் என அவர் தெரிவித்தார். (எ)

# சம்பா அரிசியை 89 ரூபாவுக்கு வழங்க வர்த்தகர்கள் இணக்கம்

## அமைச்சர் மஹிந்தானந்த தகவல்

கொழும்பு, ஏப்.06

சம்பா அரிசியை 89 ரூபாவுக்கும், நாட்டரிசியை 90 ரூபாவுக்கும் சதொச நிறுவனத்துக்கு வழங்குவதற்கு தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினருடன் விவசாய அமைச்சு போட்டித் தன்மை நிலையை ஏற்படுத்தியதன் ஊடாக தற்பொழுது அரிசி விலை வீழ்ச்சியடைந்திருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் அநுராதபுரம் ஜெயஸ்சிறி மாபோதியில் நடைபெற்ற தேசிய புத்தரிசி நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உற்பத்திக்கு கூடுதலான விலையை வழங்குவது போன்று, குறைந்த விலையில் அரிசியை நுகர்வோருக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி எம்மிடம் வலியுறுத்தினார். சவால் மிக்க இந்தத் திட்டத்தின் கீழ் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் நாட்டில் உள்ள 500 சதொச கிளை



வலைப்பின்னல் ஊடாகவும், 2,500 கூட்டுறவு விற்பனை நிலையங்களூடாகவும் 93 ரூபாவுக்கு அரிசியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். தற்பொழுது சந்தையில் அரிசியை 93 ரூபாவுக்கு பெற்றுக்கொள்ள கூடிய நிலைமை உண்டு- என்றார். (எ)

# முல்லையில் வீசிய கடும் காற்றால் தூக்கி வீசப்பட்ட வீட்டின் கூரைகள்

முல்லைத்தீவு, ஏப்.06

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட கிழவன்குளம் பகுதியில் கடும் காற்றுடன் கூடிய மழையால் வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

மாற்றுத்திறனாளியான ஒருவரின் வீட்டுக்கூரையே இவ்வாறு காற்றால் தூக்கி வீசப்பட்டது.

வீட்டிலிருந்த ஐந்து வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர்தப்பியதுடன் வீட்டின் அனைத்துப் பொருள்களும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியா, திமோர் நாடுகளில் அனர்த்தங்களுக்கு 101 பேர் மரணம்!

ஜகார்த்தா, ஏப். 06

இந்தோனேசியா, அதன் அயல் நாடான திமோர்-லெஸ்டே ஆகியவற்றில் நேற்றுமுன்தினம் கடும் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு அனர்த்தங்களால் 101 பேர் உயிரிழந்தனர்.

இந்த அனர்த்தங்களில் சிக்கி காணாமல் போனவர்கள் பலரின் சடலங்கள் மீட்கப்பட்டமையால் பலியின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்தோனேசியாவின் புளோரஸ் தீவில் இருந்து இந்தோனேசிய தீவுக்கூட்டத்திற்கு கிழக்கே உள்ள சிறிய தேசமான திமோர்-லெஸ்டே வரை கடும் மழை பெய்தது. இதனால், அங்குள்ள நீர் நிலைகள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன. அத்துடன், பல இடங்களில் அடுத்தடுத்து நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இதனால், ஆயிரக்கணக்கான வீடுகள் அழிவடைந்தன.

அனர்த்தங்களில் சிக்குண்டோரை மீட்பதில் பல நெருக்கடிகள் தொடர்கின்றன. இதனால், மீட்பு நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன என்று இந்தோனேசிய மீட்பு குழு தெரிவித்தது. நேற்று வரை 80 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. நூற்றுக்கணக்கானோர் காணமல் போயிருப்பதால் இந்த எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்தோனேசியாவின் அண்டை நாடான திமோர்-லெஸ்டேவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாங்கள் தொடர்ந்து மீட்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறோம் என்றும் அவர்கள்



தெரிவித்தனர். இந்தோனேசிய தீவுக் கூட்டம் முழுவதும் அடிக்கடி நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. கடந்த ஜனவரியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 40 பேர் உயிரிழந்தனர். இதேபோல கடந்த ஆண்டு செப்ரெம்ப ரில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 11 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், இந்தோனேசியாவில் 12.5 கோடி மக்கள் தொகையில் கிட்டத்தட்ட அரைப்பங்கினர் நிலச்சரிவு ஏற்படும் அபாயப் பகுதியிலேயே வாழ்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இதேவேளை அங்கு தொடர்ச்சியாக இடம்பெறும் காடழிப்பு நடவடிக்கையாலேயே இவ்வாறான பேரழிவுகள் இடம்பெறுகின்றன என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)



# நக்சல்களுடன் மோதல் 22 இராணுவத்தினர் பலி!

புதுடில்லி, ஏப். 06

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சலைட்களுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் 30 பேர் படுகாயமடைந்தனர்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் பிஜாப்பூர் மாவட்டத்தில் காட்டுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது இடம்பெற்ற மோதலில் 5 இராணுவத்தினர் பலியாகினர். 18 பேரை காணவில்லை என்று இந்தியா அறிவித்திருந்தது. இந்நிலையில் காணாமல் போனவர்களில் 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால், இந்த மோதலில் உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை 22ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை மோதல் இடம்பெற்ற பகுதியில் 15 நக்சல்களின் உடல்கள் கைப்பற்றப்பட்டன. இந்தத் தாக்குதலில் 20 பேர் காயமடைந்தனர் என்றும் இராணுவத் தரப்பு தெரிவித்தது. (ஐ)

## இந்தியாவில் தொற்று ஒரேநாளில் ஒரு இலட்சத்தை கடந்தது!

புதுடில்லி, ஏப். 06

இந்தியாவில் கொரோன வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் தொகை ஒரே நாளில் ஒரு இலட்சத்தை கடந்துள்ளது. நேற்று காலை 8 மணி வரையான 24 மணி நேரத்தில் ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 249 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட னர்.

தொற்று நோயின் ஆரம்பம் முதல் இந்தியாவில் ஒரு நாளில் பதிவான அதிகபட்ச கொரோனா தொற்று நோயாளர் தொகை இதுவாகும். கடந்த ஆண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி 97,894 தொற்று நோயாளர்கள் பதிவானமையே அந்நாட்டில் ஒரு நாளில் பதிவான அதிக தொற்றாளர் எண்ணிக்கையாக இருந்தது.

இதேவேளை, நேற்று வரை இந்தியாவில் ஒரு கோடியே 25 இலட்சத்து 89 ஆயிரத்து 67 பேராக அதிகரித்துள்ளது. இவர்களில் 1 கோடியே 16 இலட்சத்து 82 ஆயிரத்து 136 பேர் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்.

இதேபோன்று, தொற்றால் நேற்று 478 பேர் உயிரிழந்தனர். இதனால், தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 65 ஆயிரத்து 101 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# 53 கோடி 'பேஸ்புக்' பயனர்களின் தகவல்கள் இணையத்தில் கசிவு!

## பழையவையாம் என்கிறது 'பேஸ்புக்' நிறுவனம்

ஜெருசலேம், ஏப். 06

உலகம் முழுவதும் 53. 3 கோடி 'பேஸ்புக்' பயனர்களின் கணக்கு விவரங்கள் இணையத்தில் கசிந்திருக்கும் அதிர்ச்சி தகவல் அம்பலமாகி உள்ளது.

இஸ்ரேலின் இணைய வழிக் குற்றங்கள் தொடர்பான உளவு நிறுவனத்தின் துணை நிறுவனர் அலன் ஹால் என்பவர் 'பேஸ்புக்' பயனாளர்கள் 50 கோடி பேரின் தகவல்கள் இணையதளங்களில் இலவசமாக கிடைக்கின்றன என்ற அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தகவல்களை கடந்த ஜனவரி மாதம் முதல் இணையத் தளங்களில் பெறக்கூடியதாக உள்ளன எனத் தெரிவித்துள்ள அவர், அதுதொடர்பான ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளார். பேஸ்புக் பயனாளர்களின் முழுப்பெயர், அவர்களின் கைபேசி இலக்கங் கள், மின்னஞ்சல் முகவரி, திருமணம் ஆனவரா? இல்லையா? என்பது போன்ற தனிப்பட்ட தகவல்களும் இவற்றில் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தகவல்களை அலனுடன் இணைந்து 'பிசினஸ் இன் சைடர்' நிறுவனம் பரி சோதித்ததில் அவை உண்மை யான தகவல் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை பேஸ்புக் வழக்கம் போல் மறுத்துள்ளது. 'தற்போது வெளியாகியிருக்கும் தகவல்கள் பழையவை. இவை, 2019ஆம் ஆண்டிலேயே கசிந்தன. இந்தப் பிரச்னைக்கு தீர்வு




காணப்பட்டு விட்டது', என்று அது கூறியுள்ளது.

50 கோடிக்கு மேற்பட்டோரின் தகவல்கள் இணையத்தில் உலாவுவது பயனாளர்கள் மத்தியில் அதிருப்தியையும், தனிநபர் தகவலுக்கு பாதுகாப்பில்லாத உணர்வையும் ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

# மியன்மாரை காப்பாற்றுங்கள்!

## அழகி போட்டியில் கவனம் ஈர்த்த யுவதி!

பாங்கொக், ஏப். 06

"மியன்மாரில் தினசரி பலர் கொல்லப்படுகிறார்கள். தயவு செய்து மியன்மாருக்கு உதவுங்கள். எங்களுக்கு சர்வதேச அளவில் உடனடி உதவிகள் தேவை", என்று தாய்லாந்தில் இடம்பெற்ற அழகிப் போட்டியில் பங்கேற்ற அந்த நாட்டின் பெண் கோரிக்கை விடுத்தமை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த வாரம் தாய்லாந்தில் நடந்த அழகிப் போட்டியில் கலந்து கொண்ட ஹான் லே என்ற அழகியே தன் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் சர்வதேச நாடுகளிடம் உதவி கோரியுள்ளார்.

அத்துடன், மியன்மாரில் நடக்கும் இராணுவ அராஜகம் குறித்தும் அவர் வெளியிட்டுள்ள கருத்து சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. மியன்மாரில் வீதியில் இறங்கி இராணுவத்துக்கு எதிரான போராட்டங்களில் இவர் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மியன்மாரில் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் இதுவரை அங்கு 43 சிறுவர்கள் உட்பட 530 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையிலேயே அழகிப் போட்டியில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்க தான் தீர்மானித்தேன் என்று ஹான் லே தெரிவித்துள்ளார்.

அவரின் கருத்தைத் தொடர்ந்து அவர் தாய் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.




இதனால், அடுத்த மூன்று மாதங்களுக்கு அவர் தாய்லாந்திலேயே தங்க முடிவு செய்துள்ளார். எனினும், வரப்போகும் ஆபத்தை உணர்ந்தே தான் பேசினேன் என்று கூறியுள்ள அவர் மியன்மாரில் வசிக்கும் தனது குடும்பத்தினரின் பாதுகாப்பு குறித்தும் அச்சம் வெளியிட்டுள்ளார். (ஐ)

# ஆப்கான் படைகளின் தாக்குதல்: 80 தலிபான் தீவிரவாதிகள் பலி!



காபூல், ஏப். 06

ஆப்கானிஸ்தான் விமானப் படைகள் நேற்று நடத்திய தாக்குதலில் 80இற்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காந்தஹார் மாகாணத்தின் அர்கந்தாப் மாவட்டத்தில் நேற்று அதிகாலை தலிபான்கள் பதுங்கியிருந்த இடங்களை குறிவைத்து விமானப் படைகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் 80இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

மேலும், இந்த தாக்குதலின்போது இரண்டு டாங்கிகள் மற்றும் பல வாகனங்களும் அழிக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இந்த தாக்குதல் தொடர்பாக தலிபான்கள் தரப்பில் எந்தவித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலியின் வேண்டுகோளை ஏற்றது சென்னை அணி!

சென்னை, ஏப். 06

மொயின் அலியின் வேண்டுகோளை ஏற்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தனது ஜேர்சியில் மதுபான விளம்பர சின்னத்தை நீக்கியுள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் வீரரான மொயின் அலியை இம்முறை நடந்த ஏலத்தில் 7 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கியது சென்னை.

இந்நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் புதிய ஜேர்சியில் மதுபான விளம்பர சின்னமான "எஸ். என். ஜே. 10000" பொறிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த மொயின் அலி, "மது அருந்தக்கூடாது. அதைத் தூண்டும் செயலில் ஈடுபடக்கூடாது என்று இஸ்லாம் போதிக்கிறது. இதனால் அந்த சின்னத்தை நீக்க வேண்டும்", என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இதை ஏற்று அந்த விளம்பர அடையாளத்தை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் நீக்கியுள்ளது. (ஐ)



மகளிர் கிரிக்கெட்:

# அவுஸ்திரேலிய பெண்கள் உலக சாதனை படைத்தனர்!

சிட்னி, ஏப். 06

நியூஸிலாந்து மகளிர் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய மகளிர் அணி 6 விக்கெட்டகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து 3 ஆட்டங்கள்

கொண்ட தொடரில் அந்த அணி முன்னிலை பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து 48.5 ஓவர்களில் 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அடுத்து ஆடிய அவுஸ்திரேலியா 38.3 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 215ஓட்டங்களை எடுத்து வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடிய

நியூஸிலாந்து அணிக்கு அதிகபட்சமாக தொடக்க வீராங்கனை லௌரென் டௌன் 8 பௌண்ட்ரிகள் உள்பட 90 ஓட்டங்களை விளாசினார்.

அவுதிஸ்ரேலியாவின் பந்து வீச்சில் மீகன் ஷட் 4 விக்கெட்டுகள் சாய்த்து அசத்தினார்.

பின்னர் ஆடிய அவுஸ்திரேலிய அணியில் அலிசா ஹீலி 7 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 65 ஓட்டங்களை சேர்த்தார்.

நியூஸிலாந்தின் பந்து வீச்சில் எமி சேட்டர்வெய்ட் 10 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 1 விக்கெட்டை எடுத்தார்.

இதேசமயம், இந்தப் போட்டியை வென்றதன் மூலம் அவுஸ்திரேலிய மகளிர் அணி 23ஆவது தொடர் வெற்றியைப் பெற்றது. இதன்மூலம் றிக்கி பொண்டிங்

தலைமையிலான அவுஸ்திரேலிய ஆடவர் அணி (2003) ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ந்து 22

வெற்றிகள் பெற்றிருந்த உலக சாதனையை அவுஸ்திரேலிய மகளிர் அணி தற்போது முறியடித்துள்ளது. இந்த அணி கடந்த 2017 ஒக்ரோபர் முதல் ஒருநாள் ஆட்டங்கள் எதிலும் தோல்வி அடையவில்லை. (ஐ)

# ஷமானின் அதிரடி வீண் தென்னாபிரிக்கா வெற்றி

ஜொகன்னஸ்பேர்க், ஏப். 06

பாகிஸ்தானின் ஆரம்ப வீரர் பஹார் ஷமான் அதிரடியாக 193 ஓட்டங்களை குவித்தாலும், 17 ஓட்டங்களால் அந்த அணியை வெற்றி கொண்டது தென்னாபிரிக்கா அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி தற்போது 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று வருகின்றது. முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில் ஜொகன்னஸ்பேர்க்கில் நேற்று நடந்த இரண்டாவது ஒருநாள் போட்டியில் நேற்று முன்தினம் இரு அணிகளும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

தொடக்கம் கொடுத்த குயின்ரன் டி கொக், மக்ரம் இணை சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். மக்ரம் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 39 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து வந்த ரெம்பா பவுமா அதிரடியாக ஆட ஆரம்பித்தார். இந்நிலையில் 10 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 80 ஓட்டங்களை எடுத்த கொக் ஹரிஸ் ரவூப்பின் பந்தில் வீழ்ந்தார்.

அடுத்து வந்த வான் டெர் டுசென் அதிரடி காட்டினார் 6 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசிய அவர் 37 பந்துகளில் 60 ஓட்டங்களை குவித்தார். 9பௌண்ட்ரிகளுடன் 92 ஓட்டங்களை குவித்தார் பவுமா. 50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட்கள்



இழப்புக்கு 341 ஓட்டங்களை குவித்தது.

டேவிட் மில்லர் 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தானின் பந்து வீச்சில் ஹரிஸ் ரவூப் 3 விக்கெட்களையும், ஷா அப்ரிடி, ஹஸ்னைன், அஷ்ரப் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

342 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை விரட்ட ஆரம்பித்தது பாகிஸ்தான் அணி. இமாம் உல் ஹக், பஹர் ஷமான் இணை தொடக்கம் கொடுத்தது. இமாம் உல் ஹக் வெறும் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

ஷமான் நிலைத்து ஆட, ஏனைய வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். அணித் தலைவர் பாபர் அஸாம் மட்டும் 31 ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றார். ஆனால், 9ஆவது விக்கெட்டாக வீழ்ந்த ஷமான் 155 பந்துகளில் 18 பௌண்ட்ரிகள், 10 சிக்ஸர்களுடன் 193 ஓட்டங்களை குவித்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 324 ஓட்டங்களையே பெற்றது. இதனால் 17 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில், நோர்ட்ஜே 3, பெல்க்வாயோ 2 விக்கெட்களை கைப்பற்ற ரபாடா, நிகிடி, சம்ஷி ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் பஹார் ஷமான் தெரிவானார். (ஐ)



# மியாமி ஓப்பன் ரென்னிஸ்: பட்டம் வென்றார் ஹூபர்ட்

மியாமி, ஏப். 06

மியாமி ஓப்பனின் இறுதியாட்டத்தில் இத்தாலி வீரரான ஜானிக் சின்னரை வீழ்த்தி போலந்தின் ஹூபர்ட் ஹர்காஸ் தனது முதல் ஏ.ரி.பி. மாஸ்டர்ஸ் பட்டத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவின் பிரபல தொடரான மியாமி ஓப்பன் ரென்னிஸில் ஆண்களுக்கான இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இந்த ஆட்டத்தில் ஜானிக் சின்னரும், ஹூபர்ட் ஹர்காஸூம் மோதினர்.

சுமார் ஒரு மணித்தியாலமும் 43 நிமிடங்களும் நீடித்த இந்த ஆட்டத்தின் இறுதியில் 24 வயதான ஹர்காஸ் 7-6 (7-4) 6-4 என்ற செற் கணக்கில் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஏ.ரி.பியின் உயர்மட்ட பட்டங்களில் ஒன்றை வென்ற முதல் போலந்து ஒற்றை வீரர் என்ற பெருமையை உலக ரென்னிஸ் தரவரிசையில் 37 ஆவது இடத்தில் இருக்கும் ஹர்காஸ் பெற்றார்.

நடால், நோவக் ஜொகோவிக் மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோர் மியாமி ஓப்பன் தொடரில் பங்கேற்கவில்லை. எனினும், முன்னணி வீரர்கள் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராஜஸ்தானின் தலைவராக சஞ்சு சாம்ஸன் நியமனம்!

புதுடில்லி, ஏப். 06

ஐ.பி.எல். இருபது - 20 அணியான ராஜஸ்தான் றோயல்ஸ் சஞ்சு சாம்ஸனை அணித் தலைவராக அறிவித்துள்ளது.

ஐ.பி.எல். தொடர் அறிமுகமான ஆண்டில் சம்பியன் வென்ற அணி ராஜஸ்தான் றோயல்ஸ். ஆனால், அதன் பின்னர் அந்த அணியால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை.

கடந்த ஆண்டு அவுஸ்திரேலிய வீரரான ஸ்ரீவ் ஸ்மித்தை தலைவராக நியமித்தது அந்த அணி. ஆனால், அவர் தலைமையில் சிறப்பாக விளையாட முடியவில்லை.


இந்நிலையில் அவரை விடுவித்த ராஜஸ்தான் றோயல்ஸ், விக்கெட் காப்பாளராகவும் துடுப்பாட்ட வீரராகவும் விளங்கும் சஞ்சு சாம்ஸனை அணித் தலைவராக நியமித்துள்ளது.

இதேவேளை, இந்த அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக இலங்கையின் குமார் சங்ககார செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



மலர்வு 30 - 03 - 1941
உதிர்வு 02 - 04 - 2021

### திரு.தேவசகாயம் ஆசீர்வாதம் (குணம்)

(New Victors electronics Jaffna and Melbourne, Australia நிறுவனங்களின் முன்னாள் உரிமையாளர்)

ஊர்காவற்றுறை நாரந்தனையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், அவுஸ்திரேலியா மெல்பேர்ண் ஆகிய நகரங்களை வதிவிடமாகவும் கொண்ட திரு. தேவசகாயம் ஆசீர்வாதம் (குணம்) அவர்கள் 02.04.2021 புனித வெள்ளியன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் ஆசீர்வாதம் – திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் நல்லையா – யோகம் தம்பதிகளின் அன்பு மருமகனும் றெமிஜியா அவர்களின் அன்புக் கணவரும், சுராஜ், சுஜேன், சுகு ஆகியோரின் அன்புத் தந்தையும், ரோகினி,ப்ரீத்தி,லொரென் ஆகியோரின் அன்பு மாமனாரும், நோவா,சேவியர் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், மரியதாஸ்(இலங்கை) காலஞ்சென்றவர்களான கிறேஸ்மேரி, விக்டர் இம்மனுவேல் மற்றும் கிளி யூஜினியா (லண்டன்), குயினி (அவுஸ்திரேலியா), தேவரெட்ணம் (லண்டன்), றெஜினா யோகம் (லண்டன்), ஜெயரட்ணம் (அவுஸ்திரேலியா), அன்புமணி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஜெயமணி மரியதாஸ், தம்பிரட்ணம் மற்றும் தயாநிதி,ஜெயம்,ஜெயசிங்கம் ,கிறிஸ்றி பரராஜசிங்கம் , கிறிஷி,சுகுணா, ஆனந்தன்,காலஞ்சென்றவர்களான சரோஜினி தேவதாஸ்,டன்ஸ்ரன் ,பஸ்டியன் மற்றும் லண்டனில் வதியும் அன்ரன், ஞானம், சார்ள்ஸ் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவர்.

**அன்னாரின் இறுதி அஞ்சலியும் நல்லடக்கமும்**

**இறுதி அஞ்சலி**
08.04.2021 வியாழன்
நேரம்: 7.00 – 8.30 மணி வரை
முகவரி: Tobin Brothers Chapel,
1382 High Street,
Malvern, Victoria, Australia

**நல்லடக்கம்**
10.04.2021 சனிக்கிழமை
நேரம்:10.30 மணி
முகவரி: Boyd Chapel,
Springvale Botanical Cemetery,
Springvale, Victoria, Australia

கோவிட் தொற்று நிலைமைகளால் வரையறுக்கப்பட்ட இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வு களை நேரஞ்சலில் பார்வையிடுவதற்கு சுராஜுடன் தொடர்பு கொள்ள வும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: சுராஜ்: 0061 413 777 180 (அவுஸ்திரேலியா)
மின்னஞ்சல்: antoe.t@gmail.com
ஞானம் : 00447366888059 (லண்டன்).
மின்னஞ்சல்: gnanams@hotmail.com

# ஈஸ்டர் தின தாக்குதலுக்கு மைத்திரிபால பொறுப்பல்ல

## ஐக்கிய பிரஜைகள் கூட்டணியின் ஒருங்கிணைப்பாளர்

கொழும்பு, ஏப்ரல் 06

யுத்த காலத்தில் நடத்தப் பட்ட குண்டு தாக்குதல்களுக்கு மஹிந்த ராஜபக்ஷவைப் குறை முடியாது போல, உரித்த ஞாயிறு தினத்தில் நடத்தப் பட்ட குண்டு தாக்குதலுக்கு மைத்ரி பொறுப்பல்ல என ஐக்கிய பிரஜைகள் கூட்டணி யின் ஒருங்கிணைப்பாளர் சமீரா பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:

“உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் இடம்பெற்று 2 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்த திட்டமிடப்பட்ட மனித படு கொலையை எண்ணி நாங்கள் இன்றும் கவலையடைகிறோம். ஆனாலும், குறித்த உயிர்த்த ஞாயிறு தாக்குக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய வர்கள் 2 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இதுவரை சம்பவத் துடன் தொடர்புடைய ஒருவ ருக்கேனும் வழக்கு தொடர வில்லை,

இது எமது நாட்டின் கிறிஸ் தவ மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை வாழ் அனைத்து மக் களுக்கும் செய்த ஒரு ஏமாற்று செயலாகும். இன்றும் கூட இந்த தாக்குதலுக்கு தொடர் புடைய எவரையும் கைது செய்யவுமில்லை, யாருக்கும் எதிராக வழக்கு தொடரவு மில்லை. இதனால் எமது உள்ளத்தில் தொடர்ச்சியாக ஒரு அச்சம் இருந்துகொண்டே தான் இருக்கிறது.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் எமது நாட்டு கிறிஸ்தவ மக்களின் தலைவரெனும் வகையில் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் தலையீடு செய்து தாக்குதலுடன் சம் பந்தப்பட்ட வர்களுக்கெதிராக நீதியை நிலைநிறுத்துமாறு குரல்கொடுத்தார். உண்மையில் மத தலைவரெனும் வகையில் அது அவரின் பொறுப்பாகும். இருப்பினும் ஆண்டகையின் உரையிலிருந்து, இலங்கையின் அரசியல் அரங்கின் ஒரு இழு பறியில் அவர் தலையிட்டுள் ளாரா என்றவாறான ஒரு சந் தேகம் எமக்கு எழுந்துள்ளது.

காரணம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காலத்தில் ஆட்சிய மைத்திருந்த ஜனாதிபதி தாக்கு தலை தடுக்காமைக்கெதிராக சட்டத்தை நிலைநிறுத்துமாறு தொடர்ச்சியாக அவர் குறிப் பிட்டிருந்தார். நாம் ஏற்றுக் கொள்கிறோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் போது ஆட்சியிலிருந்த அர சாங்கம் பொறுப்புக்கூற வேண் டும். ஜனாதிபதி மாத்திரமல்ல பிரதமர் உற்பட மொத்த அர சாங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும்.

இது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தில் மாத் திரமல்ல எமது வரலாற்றி லுள்ள பல்வேறுபட்ட சம்ப வங்களுக்கும் சம்பவத்தின் போது ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும்.

விடுதலைப் புலிகள் மீதான போரின் போது நாட்டில் குண்டுவைக்கப்பட்டது. இதன் போது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியமைத்திருந்தார் என் பதனால் அவர்தான் நாடு பூரா கவும் குண்டுவெடிப்புக்களை செய்தாரென்று கூறிவிடமுடி யாதல்லவா? அதே போல்தான் கடந்த மைத்திரிபால சிசேனா வின் ஆட்சிக்காலத்தில் சம்ப வம் இடம்பெற்றிருந்தமையி னால் அவர்தான் இந்த செயலை செய்தாரென்று குறிப் பிட்டுவிட முடியாது.

எவ்வாறிருப்பினும் அவர் ஏன் தாக்குதலை தடுக்கவில்லை யென்பது குறித்து நாம் இரண் டாவதாகவே கண்டறிய வேண் டும். முதலில் இந்த சம்பவத்தை செய்தவர் யார்? இதனை ஒருங் கமைத்தவர் யார்? பின்னணியி லிருப்பவர்கள் யார்? இவ்வா றானதொரு தீவிரவாத இயக்கம் யார் தலைமையில் உருவானது? அனுசரணை வழங்கியது யார்? போன்ற விடயங்களே முதலில் கண்டறியப்பட வேண்டும்.

ஆனால் முதலில் கண்ட றியப்பட வேண்டியவற்றை விடுத்து தாக்குதலை தடுக்க முயற்சிக்காத முன்னாள் ஜனா திபதிக்கெதிராக சட்ட நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஆண்டகை தெரி விக்கிறார். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது” என்றார்.

# வழக்கு ஒத்திவைக்கப்பட்டதால் 1000 ரூபா வழங்கப்பட முடியும்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஏப்ரல் 06

பெருந்தோட்ட தொழிலா ளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1000 ரூபா வழங்கப்பட இருக் கின்றது. இது இ.தொ.கா க்கு கிடைத்த வெற்றி என இ.தொ. காவின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமாகிய ஜீவன் தொண்டமான் சௌமிய பவனில் இடம்பெற்ற செய் தியாளர் மாநாட்டில் தெரி வித்துள்ளார்.

சௌமிய பவனில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில்,

“சம்பள நிர்ணய சபையின் 1000 ரூபாய் கொடுப்பனவு தீர்மானத்திற்கு எதிராக கம்ப னிகள் தாக்கல் செய்திருந்த மனு இன்று உயர் நீதி மன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டது. வழக்கு விசாரணை யில் கம்பனி தரப்பின் கோரிக் கையை நிராகரித்த உயர் நீதி மன்றம் இம்மாதம் 27ஆம் திகதி வரை வழக்கை ஒத்தி வைத்தது.

இதன் காரணமாக வர்த்த மானி அறிவுறுத்தலில் குறிப் பிட்டுள்ளவாறு பெருந்தோட்ட தொழிலாளர்கள் 1000 ரூபாய் சம்பளத்தை பெறக்கூடியவர் களாக இருக்கின்றார்கள். ஏற்கனவே நுவரெலியா அரச பெருந்தோட்ட யாக்கம் ஒன் றின் தோட்டத் தொழிலாளர்க ளுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கி இருப்பது குறிப்பிடத் தக்கது. இது இ.தொ.காவின் முயற்சிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

இதேவேளை, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட தொழில் அமைச்சர் நிமல் ஸ்ரீபாலடி சில்வா, பெருந்தோட்ட கைத் தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன அவர்களுக்கு இ.தொ. கா சார்பாக நன்றிகளை தெரிவிக்கின்ற அதேவேளை, குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இதுவிடயத் தில் பொறுமையாக எம்மோடு கைகோர்த்து இருந்தமையால் அவர்களுக்கு நன்றிகளை தெரி வித்துக் கொள்கின்றோம்” என் றும் கூறி யுள்ளார்.

# கொழும்பு துறைமுக நகரில் பணிபுரியும் 1000 சீன பிரஜைகளுக்கு நேற்று தடுப்பூசி

கொழும்பு, ஏப். 06

கொழும்பு மாநகர சபையில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட சினோ பார்ம் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தின் மூலம் இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு தடுப் பூசி செலுத்தப்படுகிறது.

கொழும்பு துறைமுக நகரத் தில் பணிபுரியும் 1000 சீன பிர ஜைகளுக்கு நேற்று தடுப்பூசி செலுத்தப்பட்டதாக அதிகாரி ஒருவர் ஆங்கில ஊடகமொன் றுக்கு தெரிவித்தார்.

சீனா நன்கொடையாக வழங் கிய 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கடந்த வாரம் இலங்கைக்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இராணுவத்திற்கு காணி சுவீகரிப்பு: மிருசுவிலில் பொதுமக்கள் எதிர்ப்பு!

## ஏ-9 வீதியையும் மறித்துப் போராட்டம்!



**தென்மராட்சி, ஏப்ரல் 06**

**மிருசுவிலில் மக்களுக்கு சொந்தமான காணியை இராணுவத்திற்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்காக அளவீடு மேற்கொள்ளப்படவிருந்த நிலையில், பொதுமக்கள் கூடி கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது, அவர்கள் ஏ-9 வீதியையும் மறித்துப் போரடினர். இதனால், அளவீட்டு முயற்சிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன.**

மிருசுவில் இராணுவ முகாம் அமைந்துள்ள காணி 40 ஏக்கர் பரப்பளவிலானது. அது விடுதலைப் புலிகளின் பாவனையில் இருந்த காணியென குறிப்பிட்டு, இராணுவத்தினர் அங்கு முகாம் அமைத்துள்ளனர். இது தொடர்பில் காணி உரிமையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தனர். இதில், காணியில் முகாம் அமைக்க இராணுவத்தினருக்கு தடையில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான வழக்கு விசாரணைக்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அந்தக் காணியை இராணுவத்திற்கு சுவீகரிப்பதற்காக அளவீடு செய்யும் பணி நேற்று முன்னெடுக்கப்படவிருந்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இராணுவ முகாம் வாசலில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பொதுமக்களின் நிலைப்பாட்டை மதித்து, அளவீட்டை மேற்கொள்ளாமல் திரும்பி செல்வதாக பிரதேச செயலாளர் அறிவித்து அங்கிருந்து வெளியேறினார். இதன்போது, நிலஅளவை திணைக்கள பொறுப்பதிகாரி இராணுவத்தினருடன் முகாமிற்குள் நுழைந்து விட்டார். இதையடுத்து, நிலஅளவை திணைக்களத்தின் ஏனைய தரப்பினர் முகாமிற்குள் நுழையாமலும், உள்ளே சென்ற அதிகாரியை வெளியே வர வலியுறுத்தி ஏ- 9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் 20 நிமிடங்கள் ஏ9 வீதி போக்குவரத்து தடைப்பட்டது. இதையடுத்து, உள்ளே சென்ற அதிகாரி வெளியே வந்தார். நில அளவை திணைக்களத்தினர் அங்கிருந்து சென்ற பின்னர் போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

இதேவேளை, அந்த காணி அளவீட்டை தற்காலிகமாக நிறுத்துமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் நேற்று நிலஅளவை திணைக்களத்திற்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் பா.கஜதீபன், எம்.கே.சிவாஜிலிங்கம், விந்தன் கனகரட்ணம், சாவகச்சேர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# மியன்மாரில் சிக்கித்தவிக்கும் இலங்கையர்கள் மீட்கப்படுவர்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

கொழும்பு, ஏப்.06

இலங்கைக் கடற்றொழிலாளர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் வெளிநாடுகளின் எல்லைப் பாதுகாப்பு தரப்பினரிடம் சிக்கிக் கொள்வார்களாயின் அவர்களை மீட்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் நேற்று மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சுக்கு சென்று, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் குறித்த மீனவர்களின் விடுதலையை விரைவுபடுத்துமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

இதனையடுத்து, மியன்மார் தூதரக அதிகாரிகளுடன் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைது செய்யப்பட்டு நீண்ட நாள்களாக அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை கடற்றொழிலாளர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அவர்களின் விடுதலையை விரைவுபடுத்துவது தொடர்பில் அமைச்சரவை கூட்டத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருடன் கலந்துரையாடுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் உறவினர்களிடம் தெரிவித்தார்.

மியன்மார் கடற்பரப்பில் நுழைந்த குற்றச்சாட்டில் இலங்கையைச் சேர்ந்த 12 மீனவர்கள் கைது செய்யப்பட்டு கடந்த மூன்று வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## யாழ்ப்பாணத்தில் களவாடப்பட்ட

# ரூ. 50 இலட்சம் மதிப்பான பொருட்கள் மீட்கப்பட்டன!



யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் கடந்த சில மாதங்களில் களவாடப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர். அத்துடன் இந்தப் பொருட்களை களவாடினர் என்ற குற்றச்சாட்டில் இரு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிறுவனங்கள், கடைகள், தேவாலயம் மற்றும் வீடுகள் என 7 இடங்களில் களவாடப்பட்ட பெறுமதியான பொருட்கள், தளபாடங்கள் களவாடப்பட்டன.

இது தொடர்பில், யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் குற்ற விசாரணை பொறுப்பதிகாரி சி. ஐ. நெவில் பியந்த தலைமையிலான விசேட குழு நடவடிக்கையில் இறங்கியது.

இவர்களை களவாடப்பட்ட பொருட்களை கைப்பற்றியதுடன், இரு சந்தேகநபர்களையும் கைது செய்தனர். சந்தேகநபர்களை இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# பாம் எண்ணெய் இறக்குமதிக்கு தடை: உடனடியாக நடைமுறைக்கு வருகிறது!

## ஜனாதிபதியின் பணிப்பில் நடவடிக்கை!

கொழும்பு, ஏப்ரல் 06

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதியை முழுமையாக தடை செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பணிப்புரையின் பேரில் அதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு ஜனாதிபதியின் செயலாளர் மூலம் ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டு சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள பாம் எண்ணெய்யை விநியோகிப்பதை நிறுத்துமாறு சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் முள்தேங்காய் பயிர்ச் செய்கையும் முழுமையாக தடைசெய்யப்படுகின்றது.

மேலும் முள்தேங்காய் பயிர்ச்செய்கையை முழுமையாக தடை செய்வதற்கு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை நடைமுறைப்படுத்தும் வகையில் குறித்த சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நாட்டில் முள்தேங்காய் பயிரிடுவதை படிப்படியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதி ஆறு மாதங்களுக்கு முன்னர் பணிப்புரை விடுத்திருந்தார்.

தற்போது பயிரிடப்பட்டுள்ள முள்தேங்காய் பயிர்ச் செய்கை கட்டம் கட்டமாக ஒரு தடவைக்கு 10 வீதம் என்ற வகையில் அகற்றி அதற்கு மாற்றீடாக இறப்பர் அல்லது சுற்றாடல் பாதுகாப்புடன்கூடிய ஏனைய பயிர்ச் செய்கைகளுக்கு அந்நிறுவனங்களுடன் சட்டத்திற்கமைவாக செயற்படுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக நடைமுறைப்படுத்தும்போது முள்தேங்காய் பயிர்ச்செய்கை மற்றும் பாம் எண்ணெய் பயன்பாட்டை முழுமையாக நிறுத்துவது அரசாங்கத்தின் நோக்கமாகும்.

# 132 கர்ப்பவதிகளுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஏப். 06

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் தாய் மற்றும் சிசுக்களின் மரண வீதத்தில் எந்தவொரு மாற்றமும் நிகழவில்லை என குடும்ப நல சுகாதார பணிமனை அறிவித்துள்ளது.

அந்தப் பணிமனையின் தாய்மார் மற்றும் குழந்தைகள் சுகாதார பிரிவின் பணிப்பாளர் சித்ரமாலி டி சில்வா, அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இதனை தெரிவித்தார்.

நாட்டில் இதுவரை 132 கர்ப்பவதித் தாய்மார்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஐ)

# விபத்தில் சிக்கி தந்தை மரணம்; மகன் படுகாயம்

முல்லைத்தீவு, ஏப். 06

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் தேராவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் அவரது மகன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் எதிரே வந்த டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளாகினர்.

இதில், சுதந்திரபுரம் கொலனி பகுதியைச் சேர்ந்த 53 வயது வள்ளிபுனம் ஜெயரசா என்பவர் உயிரிழந்தார். அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய டிப்பர் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். விபத்து குறித்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி.கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
பகல்
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : டேக் இட் ஈஸி
6.00 மணி : ட்றெய்லர் டைம் - திரைப்படங்களின்
முன்னோட்டக் காணொளிகள்
6.30 மணி : மூவி டோக்கீஸ்-ஆங்கில
திரைப்படங்களின் விமர்சனம்
இரவு
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்பிறஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்
பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் சங்கரத்தை குளத்தடி
நாகபூணி அம்பாள் ஆலய திருவிழா
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேச்சரம்
கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
89.00 மணி : யாழ்ப்பாணம் சங்கரத்தை குளத்தடி
நாகபூணி அம்பாள் ஆலய திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துர்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org